விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 17 வியாழக்கிழமை (31.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 043

Dishtv
பழைய Dishtv ரிஸீவர்க்கு பதிலாக புதிய ரிஸீவர் 700/= மட்டுமே
SATS-TECH
சாட்ஸ் ஏக் இன்சினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை,
(பழைய தபால் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5399)

45 கிலோ கஞ்சாவுடன் ஐந்துசந்தியில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் 45 கிலோ கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த இரு நபர்களை கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட் பொலிஸ் பிரிவினர் நேற்று இரவு 11.00 மணிக்கு கைது செய்துள்ளனர். குறித்த நபர்கள் 45 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத் திருந்த போது பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் அவர்கள் குறித்த நபர் களை சோதனை செய்துள்ளனர்.

அப்போது கஞ்சா கைப்பற்றப் பட்டதுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர். விற்பனை நோக்குடன் குறித்த கஞ்சாவை 23

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கான மரணதண்டனை தீர்மானம் விரைவில்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கான மரண தண்டனை தீர்மானம் வெகு விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை அவமதிக்கின்றவர்கள் போதைப்பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்டவர்களே ஆகும் 23

அச்சுறுத்தலால் மெய்வல்லுநர் போட்டி இரத்து

(கண்டாவளை)

தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தின் விளைவால் ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த 23

சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க கோரி

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் பேரணி

ஐ.நாவுக்கும் மகஜர் கையளிப்பு

(குருமன்காடு)

சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கக் கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் நேற்று பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கிழக்கில் விசமிகளினால் வீடு தீக்கிரை

24

யாழ்.மாநகர சபையில் நிரந்தர கட்டடம் அமைக்க

2 ஆயிரத்து 350 மில்லியன் ஒதுக்க அமைச்சரவை அனுமதி – ஆனோல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிரந்தர வளாகத்தில் புதிய கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாயை அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாநகரசபை கட்டடம் யாழ் 23

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு 800 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

யாழில் அமைச்சர் மனோ கணேசன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கின் அபிவிருத்திக்கு 800 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி, தென்மேற்கு பிரதேச சபையில் நேற்று புதன் 23

இரு இந்தியர்கள் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த இந்தியப் பிரஜைகள் இருவர் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் யாழில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இந்திய பிரஜைகள் இருவரும் தோப்பு சந்திக்கு 24

வடக்கில் மீள்குடியேற்ற பணிகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு

அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள்குடியேற்ற பணிகளை துரிதமாக முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்கமைய, குறித்த பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கையின் போது, மலசலகூடம், சுகாதார வசதிகள், நீர்விநியோகம், வீதிகள் மற்றும் மின்சார தொடர்புகள் போன்ற அடிப்படை வசதிகளை 23

சிறுமியை கடத்த முயற்சி

வைத்தியசாலையிலிருந்து சந்தேக நபர் தப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுமியைக் கடத்த முயற்சித்த நபர் வைத்தியசாலையிலிருந்து தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமியைக் கடத்தும் நோக்குடன் நடமாடிய ஒருவர் நாவாந்துறைப் பகுதியில் வைத்து 23

வர்த்தக நிலையத்தில் பணியாற்றியவரை கொலை செய்தவருக்கு தூக்கு

மட்டு.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திறைந்துறைசேனை பகுதியில் நபர் ஒருவரை கத்தியால் குத்திக் கொலை செய்தவருக்கு தூக்குத் தண்டனை விதித்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றிய முகமது தம்பி அஸ்ரப் என்பவர் கழுத்து மற்றும் கையில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் முகமது நஸீர் என்பவர் குற்றத்தை ஏற்று பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். 24

இலங்கையின் குற்றவாளி பட்டியலில் 608 சிறுவர்கள்

குற்றத்தடுப்பு பொலிஸார் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் குற்றவாளி பட்டியலில் 608 சிறுவர்களும், பாடசாலை மாணவர்களும் உள்ளடங்கியுள்ளதாக குற்றத்தடுப்பு பொலிஸ் தகவல் பிரிவு வெளிப்படுத்தியுள்ளது.

ஐ.ஆர்.சி என்ற பட்டியலில் கொலை, கொள்ளை, தாக்குதல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகள் அடங்கியுள்ளதுடன், இதில் இந்த சிறு 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

அறைகள் வாடகைக்கு

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் A9 வீதிக்கு அண்மையில் (NAITA நிறுவனத்துக்கு அருகில்) இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. (அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்.)

தொடர்புகளுக்கு: 0702202207

தவறிவிட்டது

சோமசுந்தரக்குருக்கள் கேதீஸ்வரசர்மா என்பவரது (693330254V) தேசிய அடையாள அட்டை 23.01.2019 அன்று யாழ் நகரை அண்மித்த பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத் தரவும். தகுந்த அன்பளிப்பு வழங்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றேன். தகவல்: சோ.கேதீஸ்வரசர்மா

114/1, இராசாவின்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். 077 617 6752

(7363)

வர்த்த...

தரப்பால் நெறிப்படுத்தப்பட்டிருந்தன.

நேரடி சாட்சியங்கள், எதிரியான முகமது நஸீர் என்பவர் சம்பவ தினத்தன்று மாலை கடையில் நின்றிருந்த அஸ்ரப் என்பவரை கத்தியால் கழுத்து மற்றும் கையில் வெட்டியதாக சாட்சியமளித்திருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த எதிரியின் வாக்கு மூலத்திற்கு அமைய மீட்கப்பட்ட கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தியினையும் நேரடி சாட்சியங்கள் அடையாளம் காட்டியிருந்தனர்.

கழுத்தில் குத்தப்பட்டதால் மூளையின் உள்புறத்தில் ஏற்பட்ட குருதிப்பெருக்கே உயிரிழப்பு நிகழ காரணம் என சட்ட மருத்துவ அதிகாரி தனது அறிக்கையை சமர்ப்பித்து சாட்சியமளித்திருந்தார்.

வழக்குத் தொடுநர் மற்றும் எதிரி தரப்புச் சாட்சிகள் நிறைவடைந்து நேற்றைய தினம் தீர்ப்புக்காக திகதியிடப்பட்டது.

எதிரி கொல்லப்பட்டவருடனான முற்பகையைக் காரணம் வைத்து அவரைக் கொலை செய்துள்ளார் என்பது சாட்சியங்கள் ஊடாக நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால்நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதனால் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது என்று மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி வை. எல். இஸர்தீன் தீர்ப்பளித்தார். (ம-3)

வீடு வாடகைக்கு

திருமணம் மற்றும் விருந்தினர் வருகை என்பவற்றுக்கு ஏற்ற சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு கிழமை, மாத அடிப்படையில் வழங்கப்படும். வீடு கே.கே.எஸ் வீதி கில்னர் லேனில் உண்டு. (7364)

0777035457

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. நவரட்ணம் குகபரன்

B.A (Hons), PGDE, M.Phil, Med

எமது பாடசாலை தமிழ்ப் பாட ஆசிரியர் திரு. நவரட்ணம் குகபரன் அவர்கள் அண்மையில் நடைபெற்ற பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி (MEd) என்ற பட்டத்தை பெற்றுள்ளார். இவர் கல்வித் துறையில் மேலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, ஆசிரியர் கழகம்.

(மி-5348)

தவறிவிட்டது

யாழ். பிறவுண் வீதிக்கும் பண்ணை பஸ் நிலையத்துக்கும் இடையில் கணக்குப் புத்தகம், காசோலைகள் என்பன 28.01.2019 அன்று இரவு தவறியுள்ளது. இதனை கண்டெடுத்தவர்கள் அல்லது தகவல் தெரிந்தோர் பின்வரும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு கொண்டுதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நல்லைக்குமரன் ரெக்ரைல்ஸ்
இல.405, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 075 239 9555. 077 613 9019

(மி-5347)

17ஆவது ஆண்டு நினைவு

அமரர். ஸ்ரீமான் வாதவூர் தவச்செல்வம் JP

(சிற்பனை, வேலணை)

தோற்றம் 15 - 12 - 1943

மறைவு 07 - 02 - 2002

எங்கள் இதயத்தில் வாழும் தெய்வமே!
என்றும் உங்களை மறவோம்!

உங்கள் புனித ஆத்மா இறைவனின் திருவடிகளில் நித்திய பேரின்பம் பெற்று வானுலகில் இருந்து எங்களை ஆசிக்க வேண்டுகின்றோம்.

21/ 3A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

-குடும்பத்தினர்

அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 16 . 05 . 1937

மறைவு 02 . 01 . 2019

அமரர் செல்லச்சாமி பாலகிருஷ்ணசாமி

வாழும் வரம் அளித்து வாழ்வெல்லாம் வழி சமைத்து
நீளும் நினைவதனை நெஞ்சமெல்லாம் நிறைத்துவிட்டு
பேசும் குரல் மறைத்து பேசாமல் மறைந்த தெய்வம் – நாம்
வாழும் நாள் எல்லாம் விழி நீரில் நனைந்து
பாதம் பணிந்தங்கே பரவுகின்றோம் அஞ்சலிகள்

(7276)

எமது தந்தையாரின் பிரிவில் துயருற்ற வேளையில் அரவணைத்து அனுதாபங்களை தெரிவித்த அனைவருக்கும் எங்கள் நன்றிகள். அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (01.02.2019) வெள்ளிக்கிழமை அதிகாலை கீரிமலையில் உள்ள புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று பின் சபிண்டீகரண நிகழ்வு எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதோடு மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொத்தியால் ஒழுங்கை, தகவல்: குடும்பத்தினர்.
வல்வெட்டித்துறை. 0778130375, 0762752399

கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1945 . 06 . 16

உதிர்வு 2019 . 01 . 30

அமரர் சின்னையா சின்னத்துரை

சின்னஞ் சிறு அண்ணர் – எங்கள் சின்னத்துரை அண்ணர்
சித்திரக் கலை தீட்டுவதில் சிங்காரக் கண்ணன்
சிந்தையுடன் அறங்காக்கும் அறங்காவலர் – அவைத்தலைவர்
எங்கள் சின்னத்துரை அண்ணர்

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்ளுகின்றோம்.

பகுத்தறிவகம் ஒழுங்கை, அறங்காவலர் சபை
அரசடி அம்மன் வீதி, வீரபத்திரர் சிவாலயம்
திருநெல்வேலி. (7362) (பெரியதம்பிரான் ஆலயம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வட கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஒன்றிணைந்து சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டம் ஒன்றை மேற்கொண் டதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

தோட்ட நிறுவனங்கள் கூறுவது பொய்

1000 ரூபா வழங்க வேண்டும் எமது நிலைப்பாடும் அதுவே

அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

தோட்ட நிறுவனங்களுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்ற கருத்துக்கள் முற்றிலும் பொய்யானதாகும். அவர்களுக்கு இலாபம் வருகின்றது. அதனை அவர்கள் மறைத்து பொய்யான கணக்குகளைக் காண்பித்து மக்களை ஏமாற்றி வருகின்றனர் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சாட்டியுள்ளார்.

ஆயிரம் ரூபா சம்பளக் கோரிக்கை நியாயமானது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 1000 ரூபாவை வழங்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் எனவும் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு குறித்த நெருக்கடி மிகப்பெரிய குழப்பங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் அரசாங்கத்திலுள்ள தமிழ்க்கட்சிகளும் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இப்பிரச்சினையை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகின்றது என வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

வித்தியா கொலை வழக்கு

பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு எதிரான விசாரணைகளை விரைவுபடுத்தவும்

நீதவான் ஜூட்சன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் பிரதான சூத்திரதாரியான சுவிஸ்குமார், தப்பிக்க உதவியமை தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபருக்கு எதிரான வழக்கில் விசாரணைகளை விரைவுபடுத்துமாறு குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஜூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணை அறிக்கையொன்றை தாக்கல் செய்தனர்.

அதில் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் NP/1/22/15 என்ற வழக்கின் கீழேயே இடம்பெறுவதாக குறிப்பிட்டனர்.

இதனையடுத்து இந்த வழக்கில் சந்தேகநபரான முன்னாள் பிரதிப்பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி துசித் ஜோன்தாசன், குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் மேலதிக அறிக்கை தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த வழக்கு இலக்கம் வித்தியா படுகொலை வழக்கு இலக்கம் எனவும் அந்த வழக்கு விசாரணை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது எனவும் அவர் மன்றுரைத்தார்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக சரியான தகவலை மன்றுக்கு தெளிவு படுத்துமாறும், வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார். (இ-9)

யோஷிதவுக்கு எதிரான வழக்கு மே 29 ஆம் திகதி விசாரணைக்கு

(தெஹிவளை)

தெஹிவளை மிஹிந்து மாவத்தையிலுள்ள யோஷித ராஜபக்ஷவுக்கு சொந்தமான காணி மற்றும் சொத்துக்கள் சம்பந்தமாக பொலிஸ் நிதி மோசடி பிரிவினர் தாக்கல் செய்துள்ள மனு நேற்று கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

யோஷித ராஜபக்ஷ மற்றும் யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டேசி போரஸ்ட் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது பொலிஸ் நிதி மோசடி பிரிவினர், மில்லேனியம் சிட்டியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் சந்தேக நபர்களின் பெயரில் இருந்த கூட்டுக்கணக்கு சம்பந்தமாக அதன் பணிப்பாளரிடம் வாக்குமூலம் பெறப்பட்டிருப்பதாகவும், அது சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதன்படி சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ் நிதி மோசடி பிரிவினர் நீதிமன்றுக்கு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வழக்கை எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதிக்கு விசாரிக்க கல்கிஸ்ஸ பிரதான நீதவான் மொஹமட் மிஹால் உத்தரவிட்டார். (இ-7)

தமிழர்களுக்கு உயிரச்சுறுத்தல் விடுத்த

பிரியங்கவுக்கு எதிரான வழக்கு நாளை மீண்டும் விசாரணைக்கு

(லண்டன்)

பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்ணாண்டோவிற்கு எதிரான வழக்கு நாளை முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பிரித்தானியாவின் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு சைகை மூலம் கொலை மிரட்டல் விடுத்தார் என பிரிகேடியர் பிரியங்க மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

முன்னதாக பிரிகேடியர் பிரியங்கவை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு குறித்த விசாரணைகளுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஜயதிஸ்ஸ கொஸ்தா மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு தகவல்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

நியூசிலாந்துக்கு 'ஏற்றம்' தருமா 'மாற்றம்'

இன்று இந்தியாவுடன் ஹமில்டனில் 4ஆவது மோதல்

இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதும் நான்காவது ஒருநாள் போட்டி இன்று ஹமில்டனில் நடக்கிறது. இது, ரோகித் சர்மாவுக்கு 200ஆவது போட்டி என்பதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மறுபுறத்தில்தொடர்தோல்விகளால் துவளும் நியூசிலாந்து அணிக்கு சுழற்பந்து வீச்சாளர் இஷ் சோதி, வேகப்பந்து வீச்சாளர் பிரேஸ்வெல் நீக்கப்பட்டு, இவர்களுக்குப் பதில் காயத்தில் இருந்து மீண்ட 'சகல துறை வீரர் ஜேம்ஸ் நீஷம், சுழற் பந்து வீச்சாளர் டாட் ஆஸ்லே சேர்க்கப்பட்டனர். இந்த மாற்றம் நியூசிலாந்துக்கு ஏற்றம் தருமா? என எதிர்பார்க்கப்படுகிறது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்ற இந்திய அணி 3-0 என தொடரை கைப்பற்றி விட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி இன்று ஹமில்டனில் நடக்கிறது.

ரோகித் தலைவர்

ஹோலிக்கு ஓய்வு கொடுக்கப் பட்டதால், தனது 200வது போட்டியில் களமிறங்கும் ரோகித் சர்மா, இந்திய அணிக்கு தலைமை தாங்குகிறார். இவரது தலைமையில் இந்தியா பங்கேற்ற 9 போட்டிகளில் 7ல் இந்தியா வென்றுள்ளது (1 தோல்வி, 1 'சமன்'). இந்த அதிர்ஷ்டம் இன்றும் தொடரும் என நம்பலாம்.

தவிர ரோகித்தும் முதல் மூன்று போட்டிகளில் 11, 87, 62 ஓட்டங்கள் அடித்து சிறப்பான 'போர்மில்' உள்ளார். இவரது சகபாடி ஷிகர் தவானும் தன் பங்கிற்கு ஓட்டங்கள் சேர்ப்பது அணிக்கு பலம்தான்.

புதிய அறிமுகம்

தொடையின் பின் பகுதி காயம் பெரியள வில் இல்லை என்பதால் தோனி நேற்று பயிற்சியில் ஈடுபட்டார். இன்று காலை இவர் களமிறங்குவது குறித்து முடிவெடுக்கப் படும் எனத் தெரிகிறது.

இளம் வீரர் சுப்மன் கில் அறிமுக வாய்ப்பு பெற்றால் துடுப்பாட்ட வரிசை மாறலாம். தினேஷ் கார்த்திக்கிற்கு ஓய்வு கொடுக்கும் திட்டமும் உள்ளது. அம்பதி ராயுடுவுடன் 'சகலதுறை வீரர்கள்' ஹர்திக் பாண்ட்யா, கேதர் ஜாதவ் அணியில் இருப்பதால், தமிழகத்தின் விஜய் ஷங்கருக்கு அணியில் இடம் கிடைப்பது சந்தேகம்தான்.

பந்துவீச்சு நம்பிக்கை

சமீபத்திய போட்டிகளில் இந்திய அணியின் வெற்றிக்கு பந்துவீச்சின் பலமும் முக்கிய காரணமாக உள்ளது. புவனேஷ்வர், மொஹமட் ஷமி 'வேகத்தில்' மிரட்டினால், சகால் (6 விக்.), குல்தீப் (8 விக்.) கூட்டணி 'சுழல்' ஜாலம் காட்டுகின்றனர். இன்றும் தங்களது அசத்தலை தொடர்ந்தால் நல்லது.

அடுத்தடுத்த போட்டிகளில் ஆட்டநாயகன் ஆன ஷமிக்குப் பதில் இன்று கலீல் அகமட் அல்லது மொஹமட் சிராஜ் களமிறங்குவார் எனத் தெரிகிறது.

சொதப்பும் ஆரம்பம்

சமீபத்திய இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 3 முறையும் 300 ஓட்டங்களுக்கும் (371, 319, 364) மேல் குவித்தது. தற்போது மூன்று போட்டிகளில் 157, 234, 243 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்துள்ளது.

ஆரம்ப வீரர்கள் கப்டில் (5, 15, 13), மன்ரோ (8, 31, 7) தொடர்ந்து ஏமாற்றுகின்றனர். 'நடுத்தர வரிசையில்' வரும் அணித் தலைவர் வில்லியம்சன், 'சீனியர்' ரொஸ் ரெய்லர் நம்பிக்கை கொடுத்தாலும் அடுத்து வரும் ரொம் லெதாம், நிகோல்ஸ் கைவிடுகின்றனர். 'சகலதுறை வீரர்' ஜிம்மி நீஷம் என்ன செய்வார் என பொறுத்திருந்து பார்க்கலாம்.

பந்துவீச்சில் டிரன்ட் போல்ட் சிறப்பாக செயல்பட்டாலும் ரிம் சௌதி, பெர்குசன் விக்கெட் வீழ்த்த தடுமாறுகின்றனர். 'சுழலில்' சான்ட்னர் நம்பிக்கை கொடுக்க வேண்டும்.

52 ஆண்டுகளுக்குப் பின்...

கடந்த 1967-68ல் இந்திய அணி நியூசிலாந்து மண்ணில் 3-1 என ஒருநாள் தொடரை வென்றது. இன்று சாதிக்கும் பட்சத்தில் 52 ஆண்டுக்குப் பின் இங்கு சிறப்பான வெற்றியை இந்தியா (4-0) பதிவு செய்யலாம்.

ரோகித் சர்மா

சுழலுக்கு சாதகம்

ஹமில்டனில் கடந்த மூன்று போட்டிகளில் இரண்டாவதாக துடுப்பாட்டம் செய்த அணி வென்றது. 260 முதல் 290 வரை வெற்றிகரமாக 'சேஸ்' செய்யப்பட்டன. இங்கு சுழல் வீரர்கள் ஆதிக்கம் செலுத்தலாம்.

மழை வாய்ப்பு

ஹமில்டன் வானம் இன்று மேகமூட்டமாக காணப்படும். மழை வர அதிகபட்சம் 5 சதவீதம்தான் வாய்ப்புள்ளது. போட்டி முழுமையாக நடக்கலாம்.

மரண அறிவித்தல்

திருமதி அரியமணி கதிரித்தம்பி

தோற்றம்: 1928.04.08 **மறைவு: 2019.01.27**

முதலாம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல. 63, முதலி கோவில் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமணி கதிரித்தம்பி கடந்த 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - விசாலாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கதிரித்தம்பியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லர்-சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, நாகராசா, தியாகராசா, அருமைநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் பாக்கியலக்ஸ்மி (ஓய்வுநிலை Pharmacist), சந்திரவதனா (ஜேர்மனி), மதுரநாயகம் (கனடா), ஞானசேகரம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான லலிதாதேவி, நிர்மலாதேவி மற்றும் சாந்தன் (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான நந்தினி, குமுதினி மற்றும் சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாதம் (ஜேர்மனி), செல்வமலர் (மதுரகான மன்றம் மொன்றியல்), கீதா (சுவிஸ்), சியாழினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விஜய், விஜித் (ஜேர்மனி), மதுசன், நயனி (கனடா), நிவேதா, நிதர்சன் (சுவிஸ்), கஜீபன் (கனடா), சுஜீபன் (கொழும்பு), சுஜின், சஜின், அஸ்வின் (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2019) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5350)

இல.63, முதலி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி.பி. வாசுகி தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஆளுநர் அலுவலக மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் க.செவ்வேள் கலந்து கொள்வார். (இ-136)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.சுதோகுமார் சிறப்பு விருந்தினராக வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.ஜங்கரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-60)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 2 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி.சா.வாகீசன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் கலந்து கொள்வார். (இ-136)

செயற்றிட்ட நிறைவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய பயிற்சி நிலைய பொதுச் சுகாதார பரிசோதக பயிலுநர் 2017-2019 வரணி அணியினரின் செயற்றிட்ட நிறைவு விழாவும் பரிசளிப்புவிழாவும் அண்மையில் கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.தயாளன், பிராந்திய பயிற்சி நிலைய சிரேஷ்டபோதனாசிரியர் க.தெய்வேந்திரம், பிராந்திய பயிற்சி நிலைய இணைப்பாளர் க.சதீஸ், மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை) தி.கிளின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மேற்கு வாசல் புதிய கோபுர கும்பாபிஷேகம் நேற்றுக்காலை இடம்பெற்றது.

திருகோணமலை கடலில் குதித்த இரண்டாவது இளைஞனும் சடலமாக மீட்பு

(கிண்ணியா)

திருகோணமலையில் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டிற்கு பயந்து கடலில் குதித்த இரண்டாவது இளைஞனும், உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினரும் பிரதேச மக்களும் இணைந்து நேற்றிரவு முதல் நடத்திய தேடுதலில் குறித்த இளைஞனின் சடலம் நேற்று புதன்கிழமை கிண்ணியா பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. சடலம் கிண்ணியா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது. மணற்கடத்தலில் ஈடுபட்டிருந்த சிலரைக் கண்ட கடற்படையினர், நேற்று முன் தினம் பகல் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதன்போது அச்சத்தில் மூவர் தப்பியோடினர். அதில் ஒரு இளைஞனை கடற்படையினர் மடக்கிப் பிடித்தனர். இருவர் கடலில் குதித்த நிலையில், ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

இதேவேளை, மணற் கடத்தலில் ஈடுபட்ட 7 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டனர். அத்தோடு, மக்களின் கல்வீச்சில் 12 கடற்படையினர் காயமடைந்ததாக கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

நாவாந்துறையில் சிறுமி கடத்தல்

குடும்பஸ்தர் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுமியை கடத்தும் நோக்குடன் நடமாடினார் என்ற சந்தேகத்தின் பேரில் குடும்பஸ்தர் ஒருவர் நாவாந்துறை பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நாவாந்துறை பகுதியில் வசிக்கும் 12 வயது சிறுமி ஒருவரை கடந்த வாரம் குறித்த நபர் கடத்துவதற்கு முயற்சித்துள்ளார் என்றும் அவரது பிடியிலிருந்து குறித்த சிறுமி அன்றைய தினம் தப்பித்துள்ளார்.

அன்றில் இருந்து குறித்த நபரை அப்பகுதி மக்கள் தேடியுள்ளனர். இந் நிலையில் நேற்று காலை குறித்த நபர் நாவாந்துறை சந் தைப் பகுதியில் சந்தேகத் துக்கிடமான முறையில் நடமாடியுள் ளார்.

நாவாந்துறை சந்தைப் பகுதியில் கூடியிருந்தவர் கள் அந்த நபரைப் பிடித்து கட்டிவைத்து நையப் புடைத் ததுடன், யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

எனினும், 2மணி நேரத்துக்கு பின்னரே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர்.

சிறுமியை கடத்த முற்பட்டவர் காத்தான் குடியைச் சேர்ந்தவர் என்றும் சமையல் வேலைக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்த தாகவும் முதற்கட்ட விசாரணையில் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைக்காக குறித்த நபர் யாழ்ப் பாண பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (இ-4-9-10)

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்...

பாசமலர்களின் 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"கலாபூஷணம்" செல்லையா மற்றாஸ்மயில்

திருமதி.உதயராணி கோபாலகிருஷ்ணன்

திதி: 31.01.2019

எட்டு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டு
நீங்கவில்லை
இவ்வுலக வாழ்வில் எம்மை நல்வழி
நடத்தி நல்வாழ்வு
வாழ வழி சமைத்த
அன்புத் தெய்வங்களே!
நீங்கள் எம்மை விட்டுப்
பிரியாமல் எம்முடன் வாழ்கின்றீர்கள்
என்ற நம்பிக்கையுடன்
நாம் இன்னும் உயிர் வாழ்கின்றோம்.

பாசமிகு அன்புச் சகோதரர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

18, மூத்த விநாயகர் வீதி, நல்லூர். (7335)

குடும்பத்தினர்
தொ.இல: 021 222 3586

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகினி
இரவு 9.33 மணிக்கு
தனு-சந்

செவ் | | | ராகு
சூரி,புத கேது | | |
சுக், சனி | குரு,சந் | |

31.01.2019

தை 17, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

ஏகாதசி முன்னிரவு 8.44 மணிவரை

கேட்டை முன்னிரவு 10.07 மணிவரை

சுபநேரம் 8.06-9.36 மணிவரை

இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

ஏகாதசி விரதம்

வளவன்

மீனம்

வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

மேடம்

இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

இடபம்

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

மிதுனம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

கும்பம்

மனம் குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி தீட்டி திட்டங்கள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

கடகம்

தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

மகரம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

சிம்மம்

வெளியூர்த் தொடர்புகள் சிறப்பாக இருக்கும், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

தனுசு

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

விருச்சிகம்

விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே நடைபெறலாம், பயணத்தால் பலனுண்டு, குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும்.

துலாம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

கன்னி

கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை முதல்வர் சு.மோகனராஜன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ப.சசிக்குமார், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.ரவீந்திரன், கௌரவ விருந்தினர்களாக கிளி/தர்மபுரம் மத்திய கல்லூரி ஆசிரியர் ம.சசிகுமார், கோப்பாய் தேர்தல் தொகுதி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ர.பகீரதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சி.சிவசங்கர், சிறப்பு விருந்தினராக சரவணை சேவா மறைந்த தலைவர் (கனடா) சீ.சண்முகராஜன், திருமதி மஞ்சுளா சண்முகராஜன், கௌரவ விருந்தினராக சரவணை உறவுப்பாலம் தலைவர் அ.லிங்கேசன், சரவணை விவசாய சம்மேளனத் தலைவர் பா.தவபாலன், சரவணை ஒய்வு நிலை தபால் அதிபர் வே.குணரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் கு.வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கெள்வார். (இ-5-136)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை முதலாம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் சி.தீரிகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.பால்ராஜ், கௌரவ விருந்தினர்களாக யாழ்.வலய ஆசிரிய ஆலோசகர் (ஆங்கிலம்), திருமதி சு.செல்வரத்தினம், வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்களான சி.நவபாலன், செ.நிக்ஷன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை முதலாம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி எல்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை சுங்கப் பணிப்பாளர் செ.பேரின்பநாயகம், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.தபேந்திரதேவி ஜெயராசா, கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் சிறில் அன்ரன் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤➤

(யாழ்ப்பாணம்)

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ப.சுதானந்தராஜா தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.மதியழகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) மு.லோகநாதன், கௌரவ விருந்தினராக முன்னாள் வட பிராந்திய சத்திய சாயி நிறுவனத்தலைவர் இ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

தென்மராட்சி கல்வி வலய இசை ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து வழங்கிய தமிழ் இசைமாலை கொடிகாமம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை அதிபர் ப.தர்மபூபதி தலைமையில் நடைபெற்றது. (படங்கள்:- விஜயவாசன்)

மகாத்மா காந்தியின் சிரார்த்த தினம்

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் 71 ஆவது சிரார்த்த தினம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலையடியில் அனுஷ்டிக்கப்பட்டது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மதகுருமார்கள், யாழ்.இந்திய துணைத்தூதுவர், எஸ். பாலச்சந்திரன், யாழ் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ் மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், பேராசிரியர்கள், யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9-101)

வீதித் திருத்தம் குறித்து அதிருப்தி

(பொற்பதி)

துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் (கம்பரெலிய) ஊடாக வடமராட்சிக் கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களில் பல கிராமாங்களில் கிரவல் கொண்டு வீதிகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பல ஆண்டுகளாக இந்தப் பிரதேச கிராமங்களுக்கு வீதிகள் இல்லாமலும் இருக்கும் வீதிகள் அநேகமானவை களி மண்ணினாலான வீதியாகவும் அவ் வீதிகளும் நீண்டகாலமாக திருத்தப்படாமல் இடி பாடுகளும் குன்றும் குழியும் மணல் பாங்கான வீதியாக காணப்படுகின்றது.

இவ்வாறாக காணப்படுகின்ற வீதிகளையும் மணலாக காணப்பட்ட ஒழுங்கைகளையுமே வீதிகளாக்க கம்பரெலிய வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு திருத்த வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறு இடம்பெறும் வேலைகளே சீரான முறையில் இடம்பெறவில்லையென மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-64)

ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான "ஞானச்சுடர்" தை மாதத்திற்கான இதழ் (253 ஆவது மலர்) வெளியிடப்பட்டுள்ளது. (இ-5)

இந்து சமயப் பேரவையின் சற்சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து சமயப் பேரவையின் மாதாந்த சற்சங்கம் நாளை மறுதினம் 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பேரவையில் இந்துசமயப் பேரவைச் செயலாளர் ஈசான ஸ்ரீ சிவசக்தி கிரீவன் தலைமையில் நடைபெறும். (இ

யாழ்.ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்ற சனசமூக நிலையத்தினரால் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகள் பெற்ற மாணவி உ.டிலாஜினி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

காணி வழங்கி 20 வருடங்களாகியும் தபாலகம் அமைக்கப்படவில்லை

அச்சுவேலி மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பகுதியில் உப தபால் அலுவலகம் அமைப்பதற்கென பொதுமக்களால் காணி வழங்கப்பட்ட நிலையில் 20 வருடங்களாகியும் குறித்த காணியில் தபால் அலுவலகம் அமைக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அச்சுவேலி மத்தி எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் அப்பகுதி மக்களால் 4 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு உப தபால் அலுவலகம் அமைப்பதற்கு என தபால் திணைக்களத்திடம் நன்கொடையாக கையளிக்கப்பட்டது.

ஆனால் குறித்த காணியில் இதுவரை எந்தவிதமான கட்டடமும் அமைக்கப்படவில்லை. பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவையாக இருந்தும் இந்த உப தபால் அலுவலகத்தை அமைக்காமல் அதிகாரிகள் அசண்டையீனமாக உள்ளார்கள்.

உப தபால் அலுவலகத்துக்கென நிலையான கட்டடம் இல்லாத காரணத்தினால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. மக்கள் பிரதிநிதிகளும் இவ் விடயம் குறித்து கவனம் செலுத்தியதாக தெரியவில்லை.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி அவர்களால் வழங்கப்பட்ட காணியில்உப தபால் அலுவலகத்தை அமைத்து உதவி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9-10)

"Deed is the Best Education"
J/Sandilipay Hindu College
90th Anniversary

Annual Inter House Athletic Meet-2019

Date: 31.01.2019 [Thursday]
Time: 01.30 pm
Venue: College Playground

PRESIDENT
Mr.V.Nantheeswaran
Principal

CHIEF GUEST
Honourable-T.Siththarththan
Member of Parliament
Jaffna District

SPECIAL GUEST
Mr.R.Sivakumar
T.O Municipal Council, Jaffna.
Old student of J/Sandilipay Hindu College.

GUEST OF HONOUR
Mr.K.Santhiralingam
ADE-Tamil Valikamam Zone.

PROFESSIONAL GUEST
Miss.M.Sinnathambi
Jaffna District Coach-Netball
District Secretariat-Jaffna

We Cordially Invite You

(7351)

-School Society.

யாழில் சுதந்திரதின நிகழ்வு

200 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள் வழங்கப்படும்

தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் . மாநகர முதல்வர் இ. ஆனல்ட்டிற்றும் - இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ரொபினாபி மார்க்ஸிற்குமிடையில் விசேட சந்திப்பொன்று கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது.

இச்சந்திப்பில் முக்கிய மூன்று விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. முதலாவதாக தென்னாபிரிகாவின் சுதந்திரதின விழாவை இம்முறை யாழ் மாநகரத்தில் விழாவாக முன்னெடுப்பது தொடர்பாகவும், சுதந்திரதின விழாவில் தெரிவு செய்யப்படும் 200 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்களை வழங்குவதற்கு எண்ணியிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். அதனை முன்னெடுப்பதற்கான திட்டமிடல்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

அடுத்து தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் குறித்தும், அதன் நெருக்கடி நிலை மற்றும் சாதக பாதகங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஜெனீவாவில் கொண்டுவரப்படவுள்ள இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் உயர்ஸ்தானிகர் வினவியதற்கு பதிலளித்த முதல்வர் அவர்கள் "இம்முறை கொண்டுவரப்படுகின்ற தீர்மானத்தில்தான் இலங்கை தொடர்பான நிகழ்ச்சி நிரல் மார்ச் ஜெனீவா மாநாட்டில் தொடர்ந்தும் இருக்கப் போகின்றதா? இல்லையா என்று தெரியவரும். 30.1 தீர்மானத்தின் மீதான நம்பிக்கை குறைவாக இருந்ததனாலேயே சர்வதேசத்தின் அனுசரணையோடு 34.1 தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் சர்வதேசத்தின் அனுசரணையைப் பெற்றுக் கொள்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை தாங்கள் அறிந்ததே.

பல தசாப்தங்களாக இவ் அரசாங்கத்தை நம்பி நம்பி மக்கள் தற்பொழுது மிகக் கடுமையான அதிருப்தியில் இருக்கின்றார்கள். எனவே மார்ச் மாதமளவில் இலங்கை மீது கொண்டு வரப்பட வேண்டிய தீர்மானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முன்னெடுத்து வருகின்றது. இருப்பினும் அரசின் மீது கடுமையான அதிருப்தியில் இருக்கின்ற மக்களை சந்தித்து கூட்டமைப்பு தலைமை பொறிமுறை தொடர்பில் உரிய தெளிவுகளை கொடுப்பதுடன் மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுத்தான் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நான் எண்ணுகின்றேன். இது தொடர்பில் கட்சித் தலைமைக்கும் விளக்கியிருக்கின்றேன் என்று முதல்வர் கூறியிருந்ததுடன், கட்சிதான் இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இறுதியாக தென்னாபிரிக்காவினால் யாழ்.மாநகரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் முன்மொழிவுகளை உயர்ஸ்தானிகர் முதல்வரிடம் கேட்டிருந்தார். உரிய முறையில் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதாக முதல்வர் தெரிவித்தார். (இ-7)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
2செவ் 2 ல்
தகைமை/தொழில்:O/L, வெளிநாடு (Qatar)எதிர்பார்ப்பு:தொழில் புரிபவர்
தொ.இ: B/9188

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:திருவோணம்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: MD, Doctor
எதிர்பார்ப்பு:பட்டதாரி,Engineer Accountant, LLB,Pharmacist,DO,Teacher
தொ.இ: B/9190

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 2
உயரம்: 5'தகைமை/தொழில்:O/L, சாரதி
தொ.இ: B/9191

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: 39
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, CTB Driver
எதிர்பார்ப்பு:அரசதொழில்
தொ.இ: B/9192

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா: 22
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:ஆசிரியர்
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/2191

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:மகம
கி.பா:54செவ் 2இல் உயரம்:5'
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:உத்தியோகம்,சுயதொழில்
தொ.இ: G/2195

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
4கி.பா: 11செவ் 4 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L, தனியார் தொழில்
எதிர்பார்ப்பு:அரச, தனியார்தொழில், வெளிநாடு
தொ.இ: G/2196

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்:பூசம் 2 கி.பா:38
உயரம்:5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு:வியாபாரம்
தொ.இ: G/2198

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவால் ராஜபக்ஷக்கள் இடையே மோதல்

அமைச்சர் நவீன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு விவகாரத்தில் ராஜபக்ஷக்களுக்கு இடையில் ஒற்றுமை இல்லை என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தமது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புதிதாக பதிவு செய்து கொண்ட 17 இலட்சம் வாக்காளர்களும் தீர்க்கமான பங்கை வகிப்பார்கள்.

எனவே, தகுதியான வேட்பாளர் ஒருவரை விரும்பும் இந்த வாக்காளர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும். ஐ.தே.க. இப்போது மிகவும் பலமாக உள்ளது. பொதுத் தேர்தலை எதிர்கொள்ளவும் தயாராகவே உள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ராஜபக்ஷவினர் மத்தியில் ஒற்றுமை இல்லை.

குமார வெல்கம போன்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் கோத்தபாய ராஜபக்ஷவை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

ஈழத்தமிழர்களின் காவலனான முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்கு எங்கள் அஞ்சலி!

ஈழத்தமிழர் இனப் படுகொலையைத் தடுக்க 2009 இல் வீரத்தியாகி முத்துக்குமார் தீக்குளித்து மடிந்த முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் மத்தியூ பெர்னாண்டஸ் மறைந்தார் என்ற செய்தி அறிந்து நிலைகுலைந்து போனோம்.

1930 ஜூன் மாதம் 3 ஆம் திகதி பிறந்த ஜோர்ஜ் மத்தியூ பெர்னாண்டஸ் 1964 ஆம் ஆண்டில் கிறிஸ்தவ மத குருவாகப் பயிற்சி பெற்ற போதும் மக்களின் அவலங்களை நேரில் அனுபவித்ததைத் தொடர்ந்து எல்லாவற்றையும் உதறிவிட்டு அரசியலுக்குள் நுழைந்தவர். ஜனதாக் கட்சியின் ஸ்தாபகராகத் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கி தொழிற்சங்கவாதியாகவும் ஊடகவியலாளராகவும் மிகச் சிறந்த பண்பான அரசியல் வாதியாகவும் வாழ்ந்தவர். இவரது அரசியல் வாழ்வில் தொலைத் தொடர்பு அமைச்சர், கைத்தொழில் அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் எனப் பல்வேறு அமைச்சுக்களை வகித்துத் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டவர்.

1989 ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2, 3, 4ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வல்வைப் படுகொலையைத் தொடர்ந்து இந்தச் சம்பவத்தை உலகறியச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் வல்வைப் பிரஜைகள் குழுவின் சார்பில் தமிழகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கிருந்து என்னால் எழுதப்பட்ட வல்வைப் படுகொலைகள் நூலுக்கான அணிந்துரை அமரர் ஜோர்ஜ் பெர்னாண்டஸால் வழங்கப்பட்டமையே மிகப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.

ஜோர்ஜ் பெர்னாண்டஸை 1989 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கடலூரில் சந்தித்து, இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்ட பின்னர், வல்வைப் படுகொலைகள் தொடர்பான முழுமையான விபரங்களைக் கொண்ட சுமார் 200க்கும் மேற்பட்ட சத்தியப்பிரமாண வாக்குமூலங்களையும், இந்தியப் படைகளினால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட, மக்களின் புகைப்படங்களையும், எரித்தும் உடைக்கப்பட்டும் நிர்மூலமாக்கப்பட்ட வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களையும், இந்திய இராணுவச் சிப்பாய்களினால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் சத்தியக் கடதாசிகளையும் அவரது கையில் கொடுத்து அதனை முழுமையாக விபரித்த பொழுது. அவர் அதிர்ச்சியுடன் என்னிடம் கேட்ட ஒரே வினா." "எங்களுடைய இராணுவத்தினர் இவ்வளவு மோசமாக நடந்துள்ளனரா? இவற்றைப் பார்க்கும் பொழுதே வேதனையாக இருக்கின்றது" என்று கவலையுடன் தெரிவித்து எனது "வல்வைப் படுகொலைகள்" என்ற நூலை முழுமையாகப் பார்வையிட்டு அந்த நூலுக்கான அணிந்துரையையும் அவரே தனது கைப்பட எழுதித் தந்தார். அவரது அணிந்துரையுடன் "வல்வைப் படுகொலைகள்" என்று தமிழிலும் **"India's Mylai"** என்று ஆங்கிலத்திலும் எழுதி வெளியிடப்பட்டு ஒவ்வொன்றிலும் 25 ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு உலகளாவிய ரீதியில் விநியோகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்தே அவர் எமது மக்களுக்காக சர்வதேச ரீதியாக அதிகளவில் குரல் கொடுக்கத் தொடங்கியிருந்தார் என்பதை அன்று இந்திய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட்டு அதிகபடியான வாக்குகளால் வெற்றி பெற்று, வி.பி. சிங் ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் மிக அதிகளவில் அக்கறை எடுத்து ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்தார்.

இந்தியாவின் ஜனநாயகத்தைக் காக்க, தொழிலாளர்களைக் காக்க தன் வாழ்வையே அர்ப்பணித்த மாபெரும் புரட்சியாளர். பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மராட்டிய மாநிலத்தில் தொழிலாளர்களின் உரிமையைக் காக்க போராடி வெற்றியும் பெற்றார்.

கம்யூனிச சித்தாந்தத்தில் அதிக ஈடுபாடு காட்டியதால் சர்வதேச சோசலிச அமைப்பின் நிர்வாகியாகத் திகழ்ந்தார். இந்திய வரலாற்றில் மிகப்பெரிய போராட்டமாக அன்று கருதப்பட்ட 1974 ஆம் ஆண்டின் புகை வண்டித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை தலைமை தாங்கி நடத்தினார்.

1975 ஜனவரி மாதம் 25ஆம் திகதி நள்ளிரவில் பிரகடனம் செய்யப்பட்ட அவசர கால சட்டத்தினால் தலைமறைவாக வாழ்ந்து கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக தலைமறைவாக இருந்து இளைஞர்களுக்குத் தலைமை தாங்கினார். அவரது தலைமறைவு வாழ்க்கையில் காட்டிக் கொடுத்த துரோகிகளால் கொல்கத்தாவில் வைத்து கைது செய்யப்பட்டு பரோடா டைனமிக் வழக்கில் அவரைக்குற்றவாளியாக்கி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்தநேரம் கைகள் கால்களுக்கு விலங்குகள் போட்டபடி அவரை நீதி மன்றத்துக்கு அழைத்து வந்தனர்.

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பீகார் மாநிலத்தில் மிசாபூர் தொகுதியில் மூன்றரை இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற போதும் அவரை நாடி வந்த அமைச்சர் பதவியை ஏற்க மறுத்தார். ஆனால் அவருடன் சேர்ந்து இயங்கிய பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் வற்புறுத்தலின் பேரில் அமைச்சுப் பொறுப்பை ஏற்றார்.

ஈழத் தமிழ் மக்களுக்கு அவர் அரணாக இருந்ததுடன் அவர் செய்த உதவிகள் அளப்பரியன. அத்தகைய நெஞ்சுறுதி கொண்ட ஒரு மனிதனை மிகச்சிறந்த அரசியல்வாதியை இழந்து தமிழகமும், ஈழமும், புலம்பெயர் உறவுகள் வாழும் தேசமும் கண்ணீர் வடிக்கின்றது.

அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது அன்புத்துணைவியார் லைலா கபீர் பெர்னாண்டஸுக்கும் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது புதல்வருக்கும் உற்றார், உறவினருக்கும் ஈழத்தமிழர்களை நேசிக்கும் இந்திய மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஈழத் தமிழர்கள் சார்பில் குறிப்பாக வல்வெட்டித்துறை மக்களின் துயரங்களில் நேரடியாகவே பங்கு கொண்டு எமது மக்களுக்காகத் துணிச்சலுடன் சர்வதேச ரீதியாகக் குரல் கொடுத்த ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்கு வல்வை மக்களின் சார்பிலும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



வல்வை.
ந.அனந்தராஜ்

"சொந்த நிதியில் எதையும் கொடுக்கவில்லை"

பாராளுமன்ற உறுப்பினர்கள் பள்ளி செல்ல வேண்டிய நிலை

அமைச்சர் மனோ யாழில் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

ஒதுக்கிய நிதியை சரியான முறையில் பயன்படுத்தியுள்ளீர்கள் என கரவெட்டி பிரதேச சபையினருக்கு அமைச்சர் மனோ கணேசன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் நிதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களை பார்வையிடுவதற்காக நேற்றுப் புதன்கிழமை காலை வந்த அமைச்சர் மனோ கணேசனுக்கு கரவெட்டி பிரதேச சபையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன் பின்னர் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த. ஜங்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் சதி காரணமாக எமது அமைச்சுக்கு புதிய பொறுப்புக்களும் வந்துள்ளன.

இதனைக் கொண்டு பின் தங்கிய நிலையில் உள்ள, பின்தங்கி வைக்கப்பட்ட பிரதேசங்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு வருவதே எனது கொள்கை.

கடந்த வருடம் ஜனாதிபதியின் அமைச்சரவை மாற்றத்தின் போது எனது அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியை வடக்கு-கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களுக்கு ஒதுக்கினேன்.

இது மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரியுமோ தெரியாது.

எமது அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி திரும்பி திறைசேரிக்கு போகக் கூடாது என்பதற்காக நேரடியாக அத்திட்டங்களை பார்வையிட்டு செயற்படுத்தி வருகின்றேன்.

அந்த வகையில் உங்களிற்கு வந்த நிதியில் திறம்பட திட்டங்களை செய்து முடித்துள்ளீர்கள். பல இடங்களுக்கு கொடுக்கப்பட்ட நிதிகள் திறைசேரிக்கு திரும்பி சென்றுள்ளது.

இது புத்தாடையை வாங்கி கொடுத்தால் அதை அணிந்து அழகு பார்ப்பதை விடுத்து அலுமாரிக்குள் வைத்து விட்டு கொடுத்தவரிடம் திருப்பி கொடுப்பதற்கு சமனானதாகும்.

எனது சொந்த நிதியில் இருந்து எதையும் கொடுக்கவில்லை. சொந்த நிதியை கொடுத்ததாக மரியாதை தேடும் அமைச்சர் மனோ கணேசன் அல்லன் என்றார்.

இது மக்கள் பணம். அதனை ஊழல், வீண் விரயம் இல்லாது முகாமைத்துவம் செய்ய வேண்டும்.

இங்குள்ளவர்கள் எனக்கு அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள் ஏனென்று தெரியவில்லை. பிரதேச சபையை நடத்துபவர்கள் யார் என மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நாம் கட்சி ரீதியாக அல்ல மக்களுக்கான தரகர்களாக இருந்து செயற்படுகின்றோம்.

அரசியல் செய்வதாயின் பாராளுமன்றம் வாருங்கள் மிளகாய்பொடி, பெரிய புத்தகம், இருக்கைகளால் எறியப்படலாம்.

பள்ளி குழந்தைகள் பாராளுமன்றம் சென்று அவதானித்த காலம் போய், இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பள்ளி செல்ல வேண்டிய நிலை இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

விவசாயிகளை ராஜாக்களாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம் - மங்கள

(தம்புள்ள)

விவசாயிகளுக்கு சலுகைக் கடன் திட்டத்தின் மூலம் 7500 இலட்சம் ரூபா வரை பல்வேறு மட்டங்களிலும் கடன்களைப் பெற் றுக்கொடுத்து விவசாயிகளை ராஜாக்களாக்கும் வேலைத்திட்டம் என்டர்பிரைசஸ் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்தார்.

விவசாயிகளை அரசர்க ளாக்கும் வேலைத் திட்ட த்தை தற்போதைய அரசா ங்கமே ஆரம்பித்ததா கவும் அவர் தெரிவித்தார். என்டர் பிரைசஸ் ஸ்ரீலங்கா இலகு கடன் திட்டத்தின் கீழ் நாட் டின் விவசாய சமூகத்தினர் மட்டுமன்றி பல்வேறு துறை களிலுள்ளோரை தொழில் முயற்சியாளர்களாக்கும் வாய்ப்பு பெற்றுக் கொடுக் கப்பட்டுள்ளதாகவும் அமை ச்சர் தெரிவித்துள்ளார். என்டர்பிரைசஸ் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் விவசா யிகளுக்கான இலகு கடன் திட்டத்தை ஆரம்பித்து வைக் கும் நிகழ்வு தம்புள்ளையில் இடம்பெற்ற போது உரை யாற்றுகையிலேயே அமை ச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழில் முயற்சியாள ர்கள் என்பது இலங்கையர் களுக்கு புதியதொன்றல்ல. வரலாறு தொடக்கம் இலங் கையர்கள் திறமையான தொழில் முயற்சியாளர்க ளாக இருந்துள்ளனர். நாட் டின் பல்வேறு பகுதிகளிலு முள்ள மதிப் பீடுகளில் இது தெரியவருகிறது. எகிப்து, பேர்ஸியன் இதற்கு உதா ரணமாகும்.

நாம் ஆரம்பித்துள்ள விவசாய இலகு கடன் திட்ட த்தின் மூலம் 7500 இலட் சம் ரூபாவரை சகல மட்டங் களிலும் கடன் பெற்றுக் கொடுக்கப்படும். சாதாரண வட்டி வீதத்திலேயே இந்தக் கடன்கள் வழங்கப்படும். பட்டதாரிகளுக்கு இத்தகைய கடன் எந்தவொரு வட்டியுமி ல்லாமல் வழங்கப்படும்.

2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் நாடு முழுவதும் மேலும் விஸ்தரிக்கப்படவு ள்ளது. இதற்கு முதல் அறி முகப்படுத்தப்பட்டிருந்த கடன் களுக்கு மேலதிகமாக மேலும் சில கடன் திட்டங்கள் புதி தாக அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

வெளிநாடுகளில் பணிபு ரியும் இலங்கையர்களுக்கு தமக்கென வீடொன்றை நிர்மாணித்துக் கொள்வ தற்காக 100 இலட்சம் ரூபாவை கடனாக பெற்றுக் கொடு க்க உள்ளோம். இதற்கு மேல திகமாக தனியார் துறையி னருக்கு சொகுசு பேருந்து களை இறக்குமதி செய்வ தற்கும் ஆட்டோக்களை வைத்திருப்போர் கார் ஒன் றுக்கு சொந்தக்காரராவத ற்கும் இலகு கடன் திட்ட மொன்று நடைமுறைப் படு த்தப்படும்.

அரசியல் நெருக்கடி கார ணமாக நாம் சில பின்ன டைவுகளை சந்திக்க நேர்ந் தது. மீண்டும் என்டர்பிரை சஸ் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதனை முறையாக முன் னெடுத்துச் செல்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. என்டர்பிரை சஸ் ஸ்ரீல ங்கா கடன் திட்டம் தொடர் பான தகவல்களைப் பெற் றுக் கொள்ளவும் அது தொட ர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வும் 1925 என்ற நேரடியான தொலைபேசி இலக்கத்து டன் தொடர்புகொள்ள முடி யும். இந்த இலக்கம் பெப்ர வரி முதலாம் திகதியிலிரு ந்து மீண்டும் நடைமுறை க்கு வருகிறது.

இந் நிகழ்வில் அமைச் சர் களான பி. ஹரிசன், எரான் விக்கி ரமரத்ன, வசந்த அலுவிஹார உட்பட பலர்கலந்துகொண்டனர்(இ-7)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே தேர்தலை பிற்போடக்காரணம்

ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகளே தேர்தலைப் பிற்போடுவதற் கான் காரணமாக அமை ந்துள்ளது என ஐக்கிய தேசி யக் கட்சியின் தவிசாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றைய டுத்து ஊடகங்களுக்குக் கரு த்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

"தற்போதுள்ள முறை மைக்கு அமைய தேர்தலை நடத்துமாறு நாம் ஏற்கனவே கோரினோம், ஆனால் அத னைச் சுதந்திரக் கட்சியினர் ஏற்கவில்லை.

அப்படிச் செய்திருந்தால் இன்று தேர்தல் நடத்தப்பட் டிருக்கும். எந்தவொரு தேர் தலுக்கும் நாம் தயார். நாம் தேர்தலைக் கண்டு எப் போதும் அஞ்சியதில்லை" எனவும் அவர் தெரிவித்துள் ளார். (இ-7)

வெலே சுதா மனு மீது இன்று விசாரணை

(கொழும்பு)

மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ள, வெலே சுதா என அழைக்கப்படும் சமந்த குமார தன்னை விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்துள்ள மேன்முறை யீட்டு மனு நேற்று மேன்மு றையீட்டு நீதிமன்றில் விசா ரணைக்கு அழைக்கப்பட் டது.

7.05 கிராம் ஹெரோ யின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக வெலே சுதா என அழைக்க ப்படும் சமந்த குமாரவுக்கு மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான அசல வெங் கப்புலி மற்றும் தீபாலி விஜே சுந்தர ஆகியோர் முன்னி லையில் அழைக்கப்பட்டது.

இதன்போது குறித்த வழக் கின் மேலதிக விசாரணை இன்று வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது. (இ-7)

ரோஹிதவின் திருமணத்தில் அர்ஜுன் அலோசியஸ்?

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் தகவல்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷவின் இளைய மகனான ரோஹிதவின் திருமண வரவேற்பு விழா வில், மத்திய வங்கி பிணை முறி விவகாரத்துடன் தொட ர்புடையவர் எனச் சந்தேக த்தில் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டு, அண்மை யில் பிணையில் விடுவிக்கப் பட்ட, அர்ஜுன் அலோசி யஸ் கலந்துகொண்டிருந்தா ரென இராஜாங்க அமைச் சர் ரஞ்சன் ராமநாயக்க தெரி வித்துள்ளார்.

நேற்று உயர்நீதிமன்ற வளாகத்தில் வைத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பான தகவல் தனக்கு கிடைத்துள்ளதுடன், அர்ஜுன் அலோசியஸுடன் அவரதுமனைவியும்ரோஹித ஜோடியுடன் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்பட மும் எதிர்வரும் நாட்களில் தம்வசம் கிடைக்குமென்றும் அவர் தெரிவித்துள் ளார்.

"நான் பொறுப்புடன் கூறு கின்றேன். என்மீது வழக்குத் தொடருங்கள். இதனால்தான் நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அர்ஜுன் அலோசியஸ் பற்றி அதிகம் பேசுவதில்லை" என்று ரஞ்சன் ராம நாயக்க தெரிவித்துள் ளார். (இ-7)

போதைப்பொருள் சோதனைக்காக

20 நாய்களை இறக்குமதி செய்ய 4 கோடியே 68 இலட்சம் ரூபாய்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப் பொருள் சோதனை நடவடிக் கையில் ஈடுபடுத்த 20 மோப்ப நாய்களை வெளிநா ட்டிலிருந்து இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர் மானம் எடுத்துள்ளது.

இது தொடர்பான அமை ச்சரவைப் பத்திரம் சிவில் மற்றும் விமான சேவை கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவால் முன்வைக் கப்பட்டிருந்தது.

இவ்வாறு கொண்டுவ ரப்படவுள்ள ஒரு நாய்க்கு 20 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படவுள்ள தாகவும், மொத்தம் 4 கோடியே 68 இலட்சம் ரூபா நிதியை செலவு செய்யவுள்ளதாக வும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

அமைச்சரவை அனுமதி

ஜனாதிபதியைக் கொல்லச் சதி

நாலக டி சில்வாவின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத புலனாய் வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலி ஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக் கமறியல் தொடர்ந்தும் நீடிக் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் முன் னாள் பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி னார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு ள்ள அவர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர் நேற்றைய தினம் புதன்கிழமை மீண் டும் கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றில் முன் னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போதே அவரை எதிர் வரும் பெப்ரவரி 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது. (இ-7)

குடியுரிமை பிரச்சினையல்ல; ஜனாதிபதி வேட்பாளர் தயார்

மகிந்த அணி அறிவிப்பு

(கொழும்பு)

மொட்டுச் சின்னத்தின் ஜனாதிபதி வேட்பாளர் தயா ராகிவிட்டதாக மகிந்த ஆத ரவு நாடாளுமன்ற உறுப் பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள் ளார்.

கொழும்பு ஊடகம் ஒன் றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவி க்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பது தொடர்பிலேயே தற்போது அதிகமாகப் பேசப்படுகின்றது.

எமது வேட்பாளரின் குடி யுரிமை பிரச்சினைகள் எல் லாம் தீர்க்கப்பட்டுள்ளன. இந்த அரசு ஆட்சிப்பீடத்தில் ஏறிய காலத்தில், மகிந்த ராஜபக்ஷ மக்களைச் சந்தி த்துக் கலந்துரையாடினார்.

பசில் ராஜபக்ஷ தான் இவற்றையெல்லாம் ஒருங் கிணைத்து வழிநடத்திச் சென்றார். அந்தவகையில், இந்த அரசியல் போராட்டத் துக்கு உரிய தரப்பினர் உரிய நேரத்தில் களமிறங்குவர்.

எம்மிடமுள்ள சில பிரச் சினைகள் தீர்க்கப்பட்டுள் ளன. ஐக்கிய தேசியக் கட்சி க்கு எமது வேட்பாளர் தொட ர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் குடியுரிமை இருப்பதால் கோத்தபாய ராஜபக்ஷவும், பசில் ராஜப க்ஷவும் போட்டியிட முடியாது என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறு எமது வேட்பா ளர் குறித்தே அதிக கேள்வி கள் எழுந்துள்ளன. எனி னும், எம்மு தரப்பின் குடியு ரிமை பிரச்சினையும் வேட் பாளர் பிரச்சினையும் தற் போது தீர்க்கப்பட்டு விட்டன.

யார் வேட்பாளர் என்று இப்போதே எம்மால் கூறமு டியாது. யார் சரியான நபரோ, அவர் உரிய நேரத்தில் களமிறங்குவார் எனத் தெரி வித்துள்ளார். (இ-7)

சட்டவிரோத மதுபானம் தயாரிக்க பயன்படும் எதனோல் அடங்கிய கொள்கலன்கள் அழிப்பு

பெறுமதி இரண்டரை கோடி என மதிப்பீடு

(கண்டாவளை)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சுமார் ஏழாயிரம் லீற்றர் எதனோல் அடங்கிய சுமார் 331 கொள்கலன்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற கட் ளைக்கு அமைவாக ஊற்றி அழிக்கப் பட்டுள்ளன

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் கடந்த 24 ஆம் திகதி விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட பரிசோதனையின் பொழுது சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்காக பயன்படுத் தவிருந்த 7ஆயிரம் லீற்றர் எதனோல் அடங்கிய சுமார் 330 கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி இரண்டரை கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இக்குற்றச் செயலுடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப் பாணம் விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே குறித்த சட்டவிரோத பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் இருவரையும் அதிரடி படையினர் அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட மதுவரி திணைக்கள பொறுப் பதிகாரி த. நந்தகுமார், மற்றும் நிலைய பரிசோதகர் த. நளிதரன் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நீதிபதி மா. கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டதையடுத்து குறித்த இருவரையும் 31ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தர விட்டுள்ளார்.

இதேவேளை சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சுமார் ஏழாயிரம் லீற்றர் எதனோல் அடங்கிய சுமார் 331 கொள்கலன்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக நீதிமன்றப் பதிவாளர் மற்றும் அதிரடிப் படையினர், பொலிஸார், மதுவரித் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் உமையாள் புரம் பகுதியில் ஊற்றி அழிக்கப்பட்டுள்ளன. (2-315)

'அழகான இடத்தை மேலும் அழகுபடுத்துவோம்'

சங்குப்பிட்டி–கேரதீவு பாலத்தில் சிரமதானப்பணி

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சங்குப்பிட்டி-கேரதீவு பாலத்தை அண்டிய பிரதேசத்தை அழகுபடுத்தி தூய்மையாக்கும் பொருட்டு "அழகான இடத்தை மேலும் அழகுபடுத்துவோம்" எனும் தொனிப் பொருளில் சுமார் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு சிரமதானப் பணியை அண்மையில் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பகுதி தற்போது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் பொழுது போக்கும் இடமாகவும் காணப்படுகின்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த ரத்நாயக்க, பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார, கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், பூநகரிப் பிரதேச சபை தவிசாளர் அ.ஜயம்பிள்ளை ஆகியோர்கலந்துசிறப்பித்தனர்.

கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள், பள்ளிக்குடா, முக்கொம்பன் ஆகிய கிராம முன்னேற்றச் சங்கங்களின் உறுப்பினர்கள், பூநகரி பிரதேச சபை அலுவலர்கள் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.(2-84)

நாடுகடந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினருடன் சந்திப்பு

பிரித்தானியாவின் Birmingham north field பகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் தொழில்கட்சியை சேர்ந்த **Richard burdon** உம், நாடுகடந்த அரசாங்கத்தின் சார்பில் அதன் முன்னாள் அமைச்சரும்வேட்பாளருமான சொக்கலிங்கம் யோகலிங்கம், வேட்பாளர் கிருஷாந்த் துரை சிங்கம், முன்னாள் போராளியும் ஒருங்கிணைப்பாளருமான கமலகீசன் தியாகராஜா உட்பட பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு மற்றும் போர்க்குற்றம் என்பன பற்றி ஆதாரங்களுடன் எடுத்து விளக்கிய நாடு கடந்த அரசாங்கத்தினர், இலங்கை அரசாங்கத்தினரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பிரித்தானிய அரசாங்கம் பரிந்துரை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமை கூட்டத்தொடரில் பிரித்தானியாவின் பங்களிப்பு தொடர்பில் வேண்டுகோள் விடுத்தனர்.

இவர்களின் கருத்துக்களை ஆவலுடன் செவிமடுத்த பாராளுமன்ற உறுப்பினர், பிரித்தானிய அரசாங்கத்திற்கு இது தொடர்பாக அழுத்தங்களை பிரயோகிப்பதாக உறுதியளித்தார்

தொடர்ச்சியாக பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து வரும் நாடுகடந்த அரசாங்கத்தின் குழு பிரித்தானியா **Birmingham** நகரில் கடந்த 25. ஆம் திகதி இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (2)

வவுனியா விவசாயக்கல்லூரி மாணவர்களினால்

படைப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வும், துண்டுப் பிரசுரங்களும்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலும் விவசாய நடவடிக்கைகளில் படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் அதனைக் கட்டுப்படுத்த விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்களால் அதிபர் திருமதி. கே.சந்திரகாசன் தலைமையில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள விவசாய கல்லூரியில் இருந்து ஊர்வலமாக வந்த விவசாய கல்லூரி மாணவர்கள் வவுனியா நகரம், திருநாவற்குளம், மடுகந்தை, கோவில்குளம் ஆகிய பகுதிகளுக்கு ஊர்வலமாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததுடன் படைப்புழுக்களின் தாக்கம் தொடர்பிலும் அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறை தொடர்பிலும் மக்களுக்கு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்களில் படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

நூலக விழிப்புணர்வு பேரணி

(பூநகரி)

பூநகரி பிரதேசசபையின் பொது நூலக வாசிப்பு மாதத்தையொட்டிய நூலக விழிப்புணர்வுப் பேரணி பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஜயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றிய வாசிப்பு கருத்தாடல் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும், நூலக ஆலோசனைக் குழு உறுப்பினருமான பொன். தில்லைநாதன் நடத்தினார்.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் சி.ச. கிருஸ்நேந்திரன், பிரதேச சபை செயலாளர் மு. இராசகோபால் உட்பட பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். (2-84)

மாவீரர்களின் பெற்றோருக்கு உலருணவுப் பொதிகள்

(பளிக்கன்குளம்)

பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசாவின் நிதி ஒதுக்கீட்டில், மக்கள் நலன் காப்பகத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட ஐம்பது மாவீரர்களின் பெற்றோர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வானது நேற்று முன்தினம் முல்லைத்தீவு - வண்ணாங்குளம் பகுதியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில், மக்கள் நலன் காப்பகத்தின் முல்லை மாவட்டத் தலைவர் பாலு - மத்தியூசின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர்களுக்கான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (2-281)

பொது நூலகங்கள் இணைந்து நடத்திய தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சாவகச்சேரி, மீசாலை மற்றும் நுணாவில் பொதுநூலகங்கள் இணைந்து நடத்திய தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொன் விழா மண்டபத்தில் இடம் பெற்றது.

சாவகச்சேரி நகர்ாட்சி மன்றத் தவிசாளர் இ.சிவமங்கை தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் திருமதி க.கலாவதி , கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ். முரளிதரன், கொமர்சல் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.சிவரூபன் , வர்த்தகர்களான வை. சிவராசா, எஸ்.சுரேஷ் மற்றும் த. ஜெயந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் பாடசாலைச் சிறார்களின் நடனம், நாடகம், பேச்சு ஆகியன இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நகரசபையின் நூலகங்களால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை செயலாளர் க.சண்முகதாசன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள், நூலகர்கள் மற்றும் வாசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-30)

இலங்கையின் சுதந்திர தின துவிச்சக்கர பவனி

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம்

(மன்னார்)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.எச். கெபட் பீரிஸ் (வயது-53) என்ற வீரர் ஆரம்பித்த சுதந்திர தின துவிச்சக்கர பவனி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னாரை வந்தடைந்த நிலையில், நேற்று புதன்கிழமை காலை மன்னாரில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

பிரஸ்தாப வீரர் இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த 24 ஆம் திகதி கம்பஹாவில் வைத்து தனது குழுவினருடன் சுதந்திர தின துவிச்சக்கர பவனியை ஆரம்பித்தார்.

இந்த நிலையில் குறித்த பவனி பல்வேறு இடங்களுக்குச் சென்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் நகரை வந்தடைந்தது.

இந்த நிலையில் குறித்த வீரர் உள்ளிட்ட குழுவினர் மன்னாரில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி நேற்று புதன்கிழமை காலை பயணத்தைத் தொடர்ந்தனர்.

இதன்போது மத்திய விளையாட்டுத் திணைக்களத்தின் மாவட்ட விளையாட்டு பிரிவு மற்றும் உறுளை பந்தாட்ட சம்மேளனம் ஆகியவை ஆதரவு வழங்கின.

நேற்று புதன்கிழமை காலை 7 மணியளவில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி,மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு முன்பாக குறித்த பவனி ஆரம்பிக்கப்பட்டது.

இதன் போது பாடசாலை மாணவர்கள், மத்திய விளையாட்டுத் திணைக்களத்தின் மாவட்ட விளையாட்டு பிரிவு அதிகாரிகள் மற்றும் உறுளை பந்தாட்ட சம்மேளனம் ஆகியவை முழு ஆதரவை வழங்கியதோடு,பாடசாலை அதிபர் குறித்த பவனியை ஆரம் பித்து வைத்தார்.

குறித்த பவனி மன்னார் பிரதான பாலம் ஊடாக யாழ்ப் பாணத்தை நோக்கி சென்றமை குறிப்பிடத்தக்கது.(2-285)

மனித எலும்புக்கூடுகள் பரிசோதனை அறிக்கை இரு வாரங்களில் வெளிவரும்

சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மனிதப்புதை குழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவிற்கு அனுப்பி காபன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில்,குறித்த மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை இரு வாரங்களில் வெளிவரும் என அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதை குழியில் அகழ்வு பணிகள் நேற்று புதன்கிழமை 135 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 22 ஆம் திகதி நிறுத்தப்பட்ட அகழ்வு பணிகள்நேற்றைய தினம்வழமை போல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வளாகத்தில் இருந்து 300 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவற்றில் 294 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் மனித எலும்புக்கூடுகளின் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அறிக்கை இன்னும் இரு வாரங்களில் எமக்கு கிடைக்கும். எமது அகழ்வு பணிகள் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-285)

முல்லையில் இறங்குதுறை அமைக்க தெரிவான இடங்கள் பார்வை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில், கடற்றொழில் அமைச்சினால் ஏற்கனவே இறங்குதுறைகள் அமைக்கவென தெரிவுசெய்யப்பட்ட இடங்கள் பார்வையிடப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சினுடைய இறங்குதுறை நிர்மாணிக்கும் பிரிவின் பணிப்பாளர் ரணவீர - பிரபாத் அவரது குழுவின் அதிகாரிகள் இணைந்தே இவ்வாறு இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

மேலும் "வடமாகாணத்தின் நிலைபேறான மீன்பிடி அபிவிருத்தி" என்ற திட்டத்தினூடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் கடற்றொழில் அமைச்சு வடமாகாணத்தில் துறைமுகங்கள் மற்றும், இறங்குதுறை போன்றவற்றினை அமைக்கவுள்ளது.

அந்த வகையில் புவியியல் ரீதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் துறைமுகம் அமைப்பதற்குரிய இடங்கள் இல்லாதநிலையில், இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள் அதனோடு இணைந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மீன் ஏல விற்பனை நிலையங்கள், வலை திருத்தும் நிலையங்கள், இயந்திரங்கள் மற்றும் எண்ணெய்க்கான பாதுகாப்பு அறை, ஆண்,பெண் மலசல கூடம், சிறிய வெளிச்சவீடு, தண்ணீர் தாங்கி, கிணறுகள், உள்ளக வீதிகள், சந்தை போன்றவையும் இத் திட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக படகுகளைக்கொண்ட துறைகளான கொக்கிளாய், சிலாவத்தை, தீர்த்தக்கரை, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, இரணைப்பாலை, மாத்தளன் ஆகிய இடங்கள் ஏற்கனவே இறங்குதுறை நிர்மாணிக்கும் பிரிவினரால் தெரிவு செய்யப்பட்ட நிலையில், கடந்த 28 ஆம் திகதி குறித்த இடங்கள் பார்வையிடப்பட்டதுடன்,அந்தந்தப்பகுதிகடற்றொழிலாளர்களுடன் குறித்த திட்டம்பற்றி கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. (2-281)

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் பூங்கதிர் 6 இதழ் வெளியீடும்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் பூங்கதிர் 6 இதழ் வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பூநகரி பொது நூலகத்தினால் கடந்த ஆண்டில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் பொது நூலகத்தினால் வெளியிடப்பட்டு வருகின்ற பூங்கதிர் சஞ்சிகையின் ஆறாவது இதழ் வெளியீட்டு விழாவும் நடைபெற்றுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன், பூநகரி பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

பம்பை மடுவில் கொட்டப்படும் கழிவுகளுக்கு எதிராக சாளம்பைக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

வாகனங்கள் குப்பையுடன் வீதியில்

(குருமன்காடு)

வவுனியா பிரதேசத்தின் கழிவுகள் பம்பைமடு பகுதியில் கொட்டப்படுகின்றமையால் தமது கிராமம் பல்வேறு பாதிப்புகளை சந்திப்பதாக தெரிவித்து சாளம்பைகுளத்தில் வசிக்கும் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் குப்பை மேட்டிற்கு செல்லும் பிரதான வாயிலை மறித்த பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக இப்பகுதியில் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனால் எமது கிராமத்தில் வசிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. துர்நாற்றம் வீசிவருவதுடன் நுளம்புகளின் தொல்லைகள் அதிகமாக காணப்படுகின்றன.

எனவே குறித்த குப்பை மேடு அகற்றப்படாவிடில் போராட்டத்தை நிறுத்தமாட்டோம் எனத் தெரிவித்ததுடன் குப்பைகளை ஏற்றிவந்த வாகனங்களையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

சம்பவ இடத்திற்கு மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார் சென்று விடயம் தொடர்பாக ஆர்ப்பாட்டக் காரர்களுடன் பேசியிருந்தார்.

சரியான தீர்வு ஒன்று வழங்கப்படும் எனவே போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஆர்ப்பாட்டக் காரர்கள் தாங்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடும் பகுதிக்கு வருகை தந்து முடிவை கூறுமாறும் தாங்கள் எதிர்பார்த்த தீர்வு கிடைத்தால் போராட்டத்தை கைவிடுவதாகவும் தெரிவித்தனர்.

குறித்த போராட்டம் காரணமாக மாவட்டத்தின் கழிவகற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அனைத்து வாகனங்களையும் நிறுத்தி வைத்ததுடன், நகரசபை தவிசாளர், பிரதேச சபை தலைவர், உறுப்பினர்கள் அரச அதிபருடன் கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது நகரசபையின் வாகனங்கள் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டதுடன் சுகாதார ஊழியர்கள் ஏ-9 வீதியையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன் மாற்றுப்பாதையினூடாக வாகனங்களை செல்லுமாறு போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள இராணுவ முகாமை அவ்விடத்திலிருந்து அகற்றித்தரும் பட்சத்தில் அங்கு கழிவகற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியுமென வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் இதன்போது ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இதனையடுத்து பொலிஸ்நீதிமன்றத்தின்உதவியை நாடியதையடுத்து சுமார் 6 மணிநேர போராட்டத்தின் பின் நீதிமன்ற உத்தரவுக்கமைய ஏ-9 வீதியில் நிறுத்தப்பட்ட குப்பை அகற்றும் வாகனங்கள் அகற்றப்பட்டு போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் தலைமையில்கலந்துரையாடி உரிய தீர்வை எட்ட பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (2-250)

பாரதம்

கஜாபுயலால் சேதமான படகுகளுக்கு நிவாரணம் கோரி மீனவர்கள் போராட்டம்

(வேதாரண்யம்)

கஜா புயல் சேதமான படகுகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தி 75 அடி உயர்ந்த கோபுரத்தில் ஏறி வேதாரண்யம் மீனவர்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் கடந்த நவம்பர் மாதம் கஜா புயல் கரையை கடந்ததால் கடும் பாதிப்பு ஏற்பட்டது.

இதில் மீனவர் கிராமங்களில் வீடுகள் சேதமான துடன், மீன்பிடி படகுகளும் உடைந்து சேதமானது. இதனால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் 75 நாட்களுக்கும் மேலாக மீன்பிடி தொழிலுக்கு செல்லாமல் வீடுக ளில் முடங்கி கிடக்கின்றனர்.

புயலில் சேதமான படகுகளுக்கு தமிழக அரசு நிவாரண உதவிகளை அறிவித்தது. ஆனால் மீனவர்களுக்கு சேதமான படகுகளுக்கு வழங்க வேண்டிய நிவாரணத் தொகை இன்னும் பலருக்கு வழங்கப்படாமல் உள்ளது. இதனால் புதிய படகுகள் வாங்கி கடலுக்கு சென்று மீன்பிடிக்க முடியாததால் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடி வருகின்றனர்.

மீனவர்கள் அதிகாரிகளிடம் நிவாரணம் கேட்டு பலமுறை மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆறுக்காட்டுத்துறையை சேர்ந்த 10 மீனவர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் அங்குள்ள திசைகாட்டும் கருவிக்கு அமைக்கப்பட்டுள்ள 75 அடி உயர கோபுரத்தில் ஏறி தங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். புதிய படகுகள் வாங்க உதவித்தொகை வழங்க வேண்டும். இல்லையேல் கோபுரத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொள்வோம் என்று மிரட்டல் விடுத்தனர்.

இதுபற்றிய தகவல் பரவியதும் அங்கு ஏராளனமான மீனவர்கள் குவிந்தனர். அவர்களும் போராட்டம் நடத்திய மீனவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கோஷம் எழுப்பினர். இதன் காரணமாக அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (4-7)

முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் காலமானார்

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தனது 88 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலை டில்லியில் காலமானார்.

அண்மைக் காலமாக அல்சைமர் எனப்படும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஜோர்ஸ் பெர்னாண்டசுக்கு, சில நாட்களாக காய்ச்சல் ஏற்பட்டிருந்தது.

நேற்று முன்தினம்காலை 6 மணியளவில் அவரது உடல்நிலை மோசமானதை அடுத்து டில்லியில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் மரணமானார்.

மூத்த தொழிற்சங்கத் தலைவரான ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஊடகவியலாளராக, விவசாயியாக, அரசியல்வாதியாக பன்முக ஆளுமை கொண்டவர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங் உருவாக்கிய ஜனதாதளம் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இவர், பின்னர் சமதா கட்சியை நிறுவினார்.

கர்நாடக மாநிலத்தில் பிறந்த இவர், மகாராஷ்டிரா, பிகார் மாநிலங்களில் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு ஐந்து தடவைகள் உறுப்பினராகத் தெரிவானவர். வி.பி.சிங் அமைச்சரவையில் மத்திய தொடருந்து துறை அமைச்சராகப் பணியாற்றிய இவர், அடல் பிகாரி வாஜ்பாய் அரசாங்கத்தில், பாதுகாப்பு அமைச்சராக இரண்டு தடவைகள் பதவி வகித்திருந்தார்.

ஈழத் தமிழரின் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட, இந்தியத் தலைவர்களில் முக்கியமானவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்.

ஈழத் தமிழரின் போராட்டத்தை வலுப்படுத்துவதற்காக நேரடியாகவும், மறைமுகமாகவும்பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-7)



மகாத்மா காந்தியின் 71 ஆவது நினைவுதினம் நேற்றையதினம் டில்லி ராஜ்காட்டிலுள்ள காந்தியின் நினைவிடத்தில் நடைபெற்றது.

ஆஸியில் கடும் வறட்சியால் இறந்து மிதக்கும் மீன்கள்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் உள்ள டார்லிங் நதியில் கோடிக்கணக்கில் மீன்கள் இறந்து மிதப்பதால், அந்த நதி வெள்ளை நிறத்தில் காட்சியளித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் புகழ்மிக்க டார்லிங் நதி உள்ளது. இது முர்ரே டார்லிங் நதியின் ஒரு பகுதியாகும். பல ஆயிரம் கிலோமீற்றர் நீளம் கொண்டது. இந்நதியில் மீன்கள் உள்ளிட்ட பல நீர்வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. தற்போது கடுமையான வறட்சி காரணமாக ஆற்றில் உள்ள மீன்கள் இறந்து மிதக்கத் தொடங்கி உள்ளன. நேற்று நதிக்கு அருகே உள்ள மெனின்டீ பகுதி மக்கள், நதியின் மேற் பகுதியில் மீன்கள் இறந்து மிதந்து கொண்டிருப்பதைக் கண்டனர். இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கையில், "வெப்பநிலை மாற்றம் மற்றும் ஒட்சிசன் அளவு குறைந்து ஆல்காநச்சாக மாறியதால், மீன்கள் சுவாசிக்க இயலாமல் இறந்துள்ளன" என தெரிவித்தனர்.

ஆனால், சுற்றி இருக்கும் தொழிற்சாலைகளில் இருந்து ஆற்றில் கலக்கும் மாசு தான் மீன்கள் சாவதற்கு உண்மையான காரணம் என்று உள்ளூர் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கடுமையான வெப்ப நிலை அவுஸ்திரேலியாவை தாக்கி 40 இற்கும் மேற் பட்ட குதிரைகள் இறந்தன. இந்நிலையில், திடீரென வெப்பநிலை குறைந்ததாலும், பருவகால மழை காலதாமதமாக பெய்ததாலும் அவுஸ்திரேலிய மக்கள் பல சுற்றுச்சூழல் பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர்.

இதேபோல், நதியில் ஒட்சிசன் தட்டுப்பாட்டின் காரணமாக மீன்கள் இறந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4-7)

கியூபாவில் நால்வர் உ

(ஹவானா)

கியூபாவின் தலைநகரான ஹவானாவில் வீசிய சக்திவாய்ந்த சூறாவளியில் சிக்கி நால்வர் உயிரிழந்துடன், 195 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் முதல் முறையாக நேற்று முன்தினம் இரவு சக்தி வாய்ந்த சூறாவளி தலைநகரை தாக்கியுள்ளது.

சூறாவளியில் பாதிக்கப்பட்டவர்களின் விபரம் உடனடியாக வெளியிடப்படாத நிலையில், தற்போது அது குறித்த தகவல்களை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

சுமார் 100 கிலோமீற்றர் வேக

பாலஸ்தீன் பிரதமர் இர

(ஜெருசலேம்)

பாலஸ்தீனப் பிரதமர் றாமி ஹம் தல்லாஹ் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை அவர் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாசிடம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கையளித்துள்ளார்.

பிரதமரின் இராஜினாமாவை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பான ஆலோசனைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

பிரேசில் அணை உடைப்பு பொறியியலாளர்கள் உட்பட

(பிரேசிலியா)

தென்கிழக்கு பிரேசிலில் அணை உடைப்பெடுத்து ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரேசிலின் இரும்பு மற்றும் தாது அகழ்வில் ஈடுபடும் வேல் (Vale) சுரங்க நிறுவனத்தின் இரு பொறியியலாளர்கள் மற்றும் மூன்று ஊழியர்கள் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஐவரும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டதாக அரச சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அணையின் பாதுகாப்பிற்கு சான்றளிக்க தவறிய குற்றச்சாட்டில் குறித்த இரு பொறியிலாளர்களும் கைது செய்

வெனிசுவெலா கெய்டோ நாட்ட

(கராகஸ்)

வெனிசுவெலாவில் அமெரிக்கா ஆதரவு பெற்ற பாராளுமன்ற சபாநாயகர் ஜுவான் கெய்டோ, நாட்டை விட்டு செல்ல உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

வெனிசுவெலாவில் கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. பிரதான எதிர்க்கட்சியால் புறக்கணிக்கப்பட்ட இந்த தேர்தலில், ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ மீண்டும் வெற்றி பெற்றார். எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில், இம்மாதத் தொடக்கத்தில் அவர் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகவும், மறுதேர்தல் நடத்த வேண்டும் என்றும் எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

இதற்கிடையே பாராளுமன்றத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த எதிர்க்கட்சி தலைவரும் சபாநாயகருமான ஜுவான் கெய்டோ, தன்னை நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாக பிரகடனம் செய்தார். அவருக்கு அமெரிக்கா, கனடா உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்து, அங்கீகரித்துள்ளன. அத்துடன், ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ தன்னிடம் உள்ள அதிகாரத்தை ஜுவான் கெய்டோவிடம் ஒப்படைக்கும்படி வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், ஜுவான் கெய்டோவின் நியமனத்தை ஜனாதிபதி மதுரோ ஏற்க மறுத்துவிட்டார். அத்துடன் அமெரிக்காவுடனான தூதரக உறவு

வெளிநாடு

ா சூறாவளி உயிரிழப்பு

த்தில் வீசிய பலத்த காற்று காரணமாக கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

சூறாவளியைத் தொடர்ந்து ஏற்பட்ட மழையினால் ஹவானாவின் தாழ் நிலங்களில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கியூப ஜனாதிபதி சூறாவளியின் பாதிப்புகளை நேரில் ஆராய்ந்ததுடன், மீட்புப் பணியாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பகிர்ந்த ஜனாதிபதி, சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்கள் கடுமையானது எனத் தெரிவித்துள்ளார். (4-7)

ராஜினாமா!

மேலும், புதிய அரசாங்கம் உருவாக்கப்படும் வரை நாட்டில் காபந்து அரசாங்கம் செயற்படும் என்றும் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், புதிய அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும்வரை அரசாங்கத்தின் கடமைகளும், பொறுப்புகளும் தொடரும் என ஹம்தல்லாஹ் தெரிவித்தார்.

இதேவேளை, புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பான பாலஸ்தீன குழுக்களுடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக விரைவில் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (4-7)

பு விவகாரம்; ட ஐவர் கைது

யப்பட்டுள்ளனர்.

இரு வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த ஐவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார்.

தேடுதலின் போது இரு வீடுகளிலிருந்தும் பல ஆவணங்கள், கணினிகள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

குறித்த அனர்த்தத்தில் இதுவரை 85 பேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர்.

பிரேசிலின் இரும்பு மற்றும் தாது அகழ்வில் ஈடுபடும் சுரங்க நிறுவனமான Vale நிறுவனத்திற்கு சொந்தமான அணை கடந்த 25 ஆம் திகதி உடைப்பெடுத்து பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

ஜனாதிபதியாக அறிவித்த டை விட்டுச் செல்லத்தடை

உச்ச நீதிமன்றம் உத்தரவு

களை முறித்துக் கொள்வதாகவும் அறிவித்தார்.

அதேசமயம், வெளிநாடுகளின் ஆதரவுடன் தற்காலிக ஜனாதிபதியாக அறிவித்த கெய்டோவுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசின் தலைமை சட்டத்தரணி தாரிக்சாப் கேட்டுக்கொண்டார். இதற்கு பதிலளித்து பேசிய அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன், ஜுவான் கெய்டோவுக்கோ அமெரிக்க தூதர்களுக்கோ ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால், கடும் விளைவுகள் ஏற்படும் என எச்சரித்தார்.

இந்நிலையில், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. அதாவது, பாராளுமன்ற சபாநாயகர் ஜுவான் கெய்டோ, நாட்டை விட்டு செல்லக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

கெய்டோவின் பயணத் திட்டங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்றும், அவரது வங்கி கணக்குகளை முடக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தின் தலைமை சட்டத்தரணி கேட்டுக்கொண்ட சில மணி நேரங்களில் உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (4-7)

பிரேசில் அணை உடைப்பு! உயிரிழப்பு 85 ஆக உயர்வு!

உயிரிழந்தவர்களின் உடல்கள் நல்லடக்கம்

(பிரேசிலியா)

தென்கிழக்கு பிரேசிலின் புருமடின்ஹோ பகுதியிலுள்ள அணை உடைப்பெடுத்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது.

இன்னும் 276 பேர் காணாமல் போயுள்ள நிலையில், மீட்புப் பணிகள் இரவுபகலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உலகின் மிகப்பெரிய இரும்பு மற்றும் தாது சுரங்கத்தை நடத்திவரும் Vale என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான குறித்த அணை கடந்த 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடைப்பெடுத்தது.

இதனால் ஏற்பட்ட வெள்ளம் பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டதோடு, பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதே நிறுவனத்திற்குச் சொந்தமான அணை கடந்த 2015 ஆம் ஆண்டு உடைப்பெடுத்ததில் 19 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், தற்போது மீண்டும் இவ்வாறான பாரிய அனர்த்தமொன்று ஏற்பட்டுள்ளமை கடும் விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது. (4-7)

வெனிசுவெலா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை சட்டவிரோதமானது

ரஷ்யா கண்டனம்

(மொஸ்கோ)

வெனிசுவெலாவின் எண்ணெய் நிறுவனம் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை சட்டவிரோதமானது என ரஷ்யா கண்டித்துள்ளது.

இந்நிலையில், வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கலோஸ் மதுரோவின் நிர்வாகத்தை ஆதரிப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

வெனிசுவெலா அரசாங்கத்திற்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனத்தின் மீது அமெரிக்கா கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்நிலையில், இது தொடர்பாக நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லவ்ரோவ் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், வெனிசுவெலா நாட்டின் அரச சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் முயற்சியாக அமெரிக்காவின் இத்தடை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க வாடிக்கையாளர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட எண்ணெய்க்கான வருவாயைப் பெற்றுக் கொள்வதைத் தடுக்கும் வகையிலான அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

பள்ளிவாசல் மீது தாக்குதல் 2 பேர் பலி; 4 பேர் படுகாயம்

(மணிலா)

தெற்கு பிலிப்பைன்சில் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்போங்கா நகரில் நேற்று புதன்கிழமை அதிகாலையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பள்ளிவாசலுக்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்களே தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர். மத வழிபாட்டு தலங்களுக்குள் அரகேற்றப்படும் இவ்வாறான தாக்குதல்கள் கோழைத்தனமானவை என பிராந்திய தலைவர் இதற்குக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார். இத்தாக்குதலுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற இரட்டைக் குண்டுவெடிப்பில் 20 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

மக்களுக்கு சேவை செய்வதே முக்கியமானது

பணி நேரத்தில் பேஸ்புக் பார்த்தால் பணியில் இருந்து உடன் நீக்கம்!

அரச அலுவலர்களுக்கு மைத்திரி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் பணிபுரியும் உத்தியோகத் தர்கள் பணி நேரங்களில் தொலைபேசி மற்றும் பேஸ் புக் போன்றவற்றில் கால த்தை வீணடிப்பதாக மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரட்ன தெரிவித் துள் ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

தொலைபேசிகளில் குறுஞ் செய்திகளை அனுப் புவது, பேஸ்புக் பார்ப்பது தொடர்பில் அரசாங்க உத்தி யோகத்தர்கள் நேரத்தை வீணடிக்கின்றனர். இந் நிலையில் எத்தனை மணி நேரம் சரியாகப் பணிப்புரி கிறார்கள்,

எந்தவொரு அதிகாரியாக இருந்தாலும் பணிபுரியும் நேரத்தில் பேஸ்புக் பார்த்தார் என எனக்குப் புகார் கிடை த்தால் உடனடியாக பணியில் இருந்து நீக்கி விட்டு அதன் பின்னர் தான் குறித்த அதி காரியிடம் விசாரணை நட த்துவேன்.

பொதுமக்களுக்கு வழங் கும் சேவையானது சரியான முறையில் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (இ-7)

பாரம்பரிய கலைஞர்களின் ஆற்றல்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்க வேண்டும்

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமிய மட்டத்திலுள்ள பாரம்பரிய கலைஞர்களின் அறிவு, ஆற்றல்களை அவர் களது வாழ்க்கைப் பயணத் தின் முடிவோடு முடிவுற இடமளிக்காது அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று அவசியமாகு



மென தெரிவித்ததோடு, இவ் விடயம் தொடர்பில் அமைச் சுக்களின் மட்டத்தில் கவ னம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலா பூஷணம் அரச விருது விழா வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனா திபதி மேற்கண்டவாறு தெரி வித்தார்.

நாட்டின் கலைத்துறை யின் மேம்பாட்டுக்காக சிறப் பான சேவைகளை ஆற்றிய கலைஞர்கள் 200 பேருக்கு இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், விசேட விருதுகளைப் பெற் றோருக்கு ஜனாதிபதி விருது களை வழங்கினார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந் தம் ஏற்பாடு செய்யப்படும் இந்த விருது விழா இம் முறை 24 ஆவது தடவை யாக ஏற்பாடு செய்யப்பட்டு ள்ளது.

மனிதநேயத்துடன் கூடிய சமூகமொன்றை உருவாக்கு வதற்காக கலைஞர்கள் நிறைவேற்றும் செயற் பணி களை இதன்போது பாராட்டிய ஜனாதிபதி, இவ்வாறான விருது விழாக்களை ஏற்பாடு செய்வதற்கூடாக கலை ஞர்கள் தேசத்திற்காக நிறை வேற்றும் விசேட செயற் பணி களை அனைவரும் அறிந்து கொள்ள முடிகின்றதென தெரிவித்தார்.

உள்நாட்டு திரைப்படத் துறை, மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகக் கலை உள்ளிட்ட ஆவணக் கலைகளைப் பாதுகாத்து, மக்கள் மத்தியில் சிறந்த கருத்துக்களை ஏற்படுத்து வதற்காக அன்று தொட்டு இன்றுவரை பணியாற்றி வரும் சகல கலைஞர்களு க்கும் ஜனாதிபதி இதன் போது தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். (இ-7)

தொல்பொருள்களுக்கு சேதம் விளைவித்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தப்படும்

துறைசார் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடத்திற்கு சேதம் விளைவித்தல் மற்றும் அதன் கௌரவத்தை அழிக் கும் நபர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக்கப்பட வுள்ளதாக தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பி.பீ.மண்டாவெல எச்சரித்துள்ளார்.

அத்துடன் தற்போது இது தொடர்பான சட்டதிட்டங்கள் போதுமானதாகவில்லை எனவும், தொல்பொருள் பெறு மதி கொண்ட இடங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் அத னைப் பாதுகாப்பது தொடர் பில் பொதுமக்களுக்கு அறி வூட்டுவதும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (இ-7)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

விலங்குகளின் பண்புகள்

காலையிலே எழுந்து கொஞ்சத் தூரத்திற்கு நடந்து போறீங்க! கொஞ்சத் தூரம் நடந்து போனதற்குப் பிறகு திரும்பி வீட்டுக்கு வருகின்றீர்கள்! இது ஒரு சாதாரண விடயம் தான்.

இருந்தாலும் உங்கள் வீடு இருக்கிற இடத்தை சரியாகக் கண்டு பிடித்து வந்து சேர்கிறீர்களே அது எப்படி?

ஒரு மனிதன் தன்னுடைய வீட்டை நோக்கி போய்க்கொண்டு இருக்கிற போது சில அறிமுகமான கட்டடங்கள், வீதித்திருப்பங்கள், மரங்கள், தெருவுடைய அமைப்பு இதைப்பற்றிய விபரங்களை தன்னுடைய நினைவிலேயிருந்து மீட்டுப் பரிசீலனை செய்து, தான் சேர வேண்டிய இடம் வந்துவிட்டது என்பதை புரிந்து கொள்கின்றான்.

சிலபேர், வீட்டிலே கோபித்துக் கொண்டு வெளியிலே போவது வழக்கம். இவர்கள் எல்லாம் வேறு வீதிகள், மரங்கள் இதையெல்லாம் நினைப்புக்குக் கொண்டு வந்து அந்த வழியிலே போய்விடுவார்கள்!

இதை எதுக்குச் சொல்கிறேன் என்றால்...

பட்டறிவு அதாவது அனுபவம் மூலமாக கற்றுக் கொள்கின்ற பண்புகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு என்று இதுவரைக்கும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

சமீப காலத்திலே சில ஆராய்ச்சியெல்லாம் செய்து பார்த்து விட்டு இது மாதிரி பண்புகள் விலங்குகளுக்கும் உண்டு என்று சொல்ல ஆரம்பித்து இருக்கி றார்கள்.

இதற்கு ஏன் அவ்வளவு தூரம் போகின்றீர்கள்..

ஏற்கனவே நமக்குத் தெரிந்தது தானே...

தேனீ இருக்கின்றதே–அது தேன் கிடைக்கக் கூடிய இடங்களை நல்லா ஞாபகத்திலே வைத்துக் கொள்கின்றது. சரியாகப் போய் தேனை எடுத்துக் கொண்டு... வழி தவறாமல் தேன் கூட்டுக்கு வந்து சேர்ந்து விடுகின்றது. இது எப்படி ஞாபகத்திலே வைத்துக் கொள்கின்றது தெரியுமா?

தேனின் நறுமணம், தேன் உள்ள மலரின் வடிவம், அந்த மலர் மலரும் நேரம் இப்படி வரிசைக் கிரமத்திலே அது தகவல்களை சேமித்து வைத்துக் கொள் கின்றது.

இப்பொழுது நாமெல்லாம், நாற்காலி, மேஜை, அலுமாரி இதையெல்லாம் மரப் பொருட்கள் என்று வகைப்படுத்தி வைத்திருக்கின்றோம் இல்லையா? இதே மாதிரி புறாக்கள் எல்லாம் ஒரே வடிவமுள்ள மரங்களை ஒரு குழுவாக வகைப்படுத்திக் கொள்கிறதாம்!

விலங்கு–பறவை –பூச்சி இது எல்லாம் சுயேட்சையாக சூழ்நிலையிலே இருக்கிறபோது எப்படி நடந்து கொள்கிறது?

ஆராய்ச்சி சாலையிலே கட்டுப்பாடான சூழ்நிலையிலே எப்படி நடந்து கொள்கின்றது?

கடந்த பத்து வருடமாகத்தான் விஞ்ஞானிகள் இதைப் பற்றியெல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். விலங்குகள் நடந்து கொள் கின்ற விதத்தைப் பற்றி சொல்கின்ற போது இரண்டுவித அணுகுமுறை உண்டு!

உள்ளுணர்வு என்பது ஒன்று! அதாவது Instinct இன்னொன்று பட்டறிவு அதாவது அனுபவம். Experience. இது இரண்டும் தனித்தனியாக பிரிந்து இருக்கிறதில்லே! அனுபவத்திலே இருந்து கற்றுக் கொள்கின்ற திறமை மனிதனுக்கு மட்டும் தான் உண்டு என்று நினைத்துக் கொண்டிருந்தோம். விலங்குகளுக்கும் அந்தத் திறமை உண்டு என்பதை இப்பொழுது தெரிந்திருக் கிறது.

ஒரு விலங்கிற்கு– தான் உயிர் பிழைத்து வாழ்வதற்காக, தான் வாழும் சூழ் நிலைக்கு ஏற்றபடி தன்னுடைய நடத்தையை மாற்றிக் கொள்கின்ற திறமை இருக்கிறது!

நடத்தைகளின் பரிணாமத்திலே மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக் கும் வித்தியாசமில்லை என்கிறது இப்போது தெளிவாகப் புரிந்து போய்விட்டது!

பொதுவாக விலங்கு–பறவை– பூச்சி இவற்றுக்கெல்லாம் பயிற்சி கொடுத் தால் கற்றுக்கொள்ளும் என்று ஒரு அடிப்படையான எண்ணம் ஆராய்ச்சி யாளர்களுக்கு இருந்தது. அது சரியில்லையாம்!

பரிணாம வழியாகத் தோன்றின ஓர் உள்ளுணர்வு இருந்தால்தான் ஒரு உயிரினம் ஒரு நடத்தையை மேற்கொள்ளுமாம்!

அந்த உள்ளுணர்வு பரிணாம வளர்ச்சியிலே மரபு வழியா வருகின்றது!

ஆகக்கூடிய, படைப்பிலே எந்த வித்தியாசமும் இல்லை என்பது தெளிவாகி விட்டது.

அற்குப் பிறகு என்னத்துக்கு மனிதனுக்குள்ளே வித்தியாசம்! அகந்தை யினாலே வருவது தான் இந்த வித்தியாசம். ஒருத்தர் இருந்தார்... தன்னைப் பற்றி எப்பவும் மிகவும் பெருமையாக நினைக்கிறவர் அவர்.

இன்னொருத்தரைப் பார்க்கப் போனார். அவர் அப்பொழுது தான் தீவிரமாக ஒரு பூச்சியைப் பற்றி ஆராய்ச்சிக் குறிப்பு எழுதிக் கொண்டு இருந்தார். ஒரு நிமிடம் இந்த நாற்காலியிலே அமருங்கள். இதோ வந்துவிட்டேன் என்றார். வந்தவருக்கு கோபம். இந்த பூச்சியை விட நாம் என்ன மட்டமா என்று நினைத்துவிட்டார்.

"நான் யார் தெரியுமல்லவா! மிகவும் பெரிய மனிதன்!" அப்படி என்றார். உடனே அவர்...

அப்படி என்றால் இரண்டு நாற்காலியிலே இருங்கள் என்றார்!

விமானத்தை அனுப்பி நாயை கொண்டுவந்தவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த எதிரணி முயற்சி

அமைச்சர் சம்பிக்க காட்டம்

(கொழும்பு)

சூரிச் நகருக்கு விமானம் ஒன்றை அனுப்பி வீட்டில் வளர்ப்பதற்காக நாயொன்றை கொண்டு வந்தவரையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த எதிரணி தயாராவதாக மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பதுளை பேருந்து தரிப்பிட நிர்மாணப்பணிகளைப் பார்வையிடுவதற்காகச் சென்ற அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்ப நிர்வாகத்தை தங்களிடம் ஒப்படைக்குமாறு சிலர் கூறுகின்றனர்.

1998 முதல் 10 வருடங்களில் ஈட்டப்பட்ட 14 ஆயிரம் மில்லியன் இலாபத்துடனே ஸ்ரீலங்கன் விமான நிலையம் மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டை கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயாராகும் நபர்களின் நிர்வாகத்தின் கீழே விமான சேவைக்கு 250 மில்லியன் நட்டம் ஏற்பட்டது.

மக்கள் வராத மாநாட்டு மண்டபங்கள், விமானம் வராத விமான நிலையங்கள், கிரிக்கெட் விளையாடாத கிரிக்கெட் மைதானாங்கள், பெருமைக்காக கட்டிய துறைமுகங்கள் என்பன வற்றை அமைத்தவர்கள் போன்று நாம் நாட்டை நாசம் செய்யவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் என்று கூறிக் கொள்ளும் நபரின் வீட்டிற்கு நாய் ஒன்றை கொண்டு வர சூரிச் நகரிற்கு விமானம் ஒன்று அனுப்பப்பட்டது.

இவர்கள் தான் இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட சிறந்த முகாமைத்துவ நிபுணர்கள் போன்று தம்மை கூறிக்கொள்கிறார்கள்.

இவர்கள் தான் விமான சேவையை நாசமாக்கினார்கள். இதன் பலனை இன்று அனுபவிக்க நேரிட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அமரதுங்கவின் தீர்மானத்திற்கு ரணில் எதிர்ப்பு

இரு தலைவர்களின் நியமனங்கள் இறுதி நேரத்தில் தடுத்து நிறுத்தம்

(கொழும்பு)

சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவால், மேற்கொள்ளப்பட்ட இரண்டு சபைகளின் தலைவர்களுக்கான புதிய நியமனங்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறுதி நேரத்தில் தடுத்துள்ளதாக தகவல்கள்வெளியாகியுள்ளன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பேரவை ஆகியவற்றுக்கான தலைவர்களின் நியமனங்கள் ஜனாதிபதியின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படவிருந்தன.

எனினும் இந்த நியமனங்கள் தொடர்பில் ஜோன் அமரதுங்க, பிரதமருடன் கலந்தாலோசிக்கவில்லை.

இந் நிலையில் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நடத்தப்பட அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையிலேயே அது பிரதமர், அலுவலகத்தினால் தடுக்கப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணத்தால் நிகழ்வு நிறுத்தப்பட்டதாக இதன்போது அமைச்சர் ஜோன் அமரதுங்க காரணம் கூறியுள்ளார். (இ-7)

கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தானதும் தோட்ட கம்பனி பங்குகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சம்பளத்தை அதிகரிக்க பெருந்தோட்டக் கம்பனிகள் இணங்கிய நிலையில் பங்குச் சந்தையில் பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்குகள் சரிவைக் கண்டுள்ளன. இந்த சம்பள அதிகரிப்பால் ஒவ்வொரு கம்பனியும் வருடமொன்றுக்கு சராசரியாக 350மில்லியன் முதல் 450 மில்லியன் வரையில் சம்பளங்களை அதிகரிக்க வேண்டியிருப்பதாக பெருந்தோட்ட தொழிற்றுறையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பட்டியலிடப்பட்ட 18 பெருந்தோட்ட கம்பனிகளில் 10 கம்பனிகளின் பங்குகள் சரிவைக் காண்பித்தன. தலவாக்கலை பெருந்தோட்டம், உடபுசல்லாவ பெருந்தோட்டம், பொகவந்தலாவ பெருந்தோட்டம் ஆகியவற்றின் பங்குகள் சரிவைக் காண்பித்தன.

பெருந்தோட்டக் கம்பனிகளில் தலா 7ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையானவர்கள் பணியாற்றிவரும் நிலையில் ஒவ்வொரு கம்பனியும் தலா 350 மில்லியன் முதல் 450 மில்லியன் ரூபா வரையில் சம்பள உயர்வை வழங்க வேண்டியிருப்பதாகவும் கம்பனிகளின் பேச்சாளர் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் 20 கம்பனிகளில் சுமார் ஒரு இலட்சத்து 54 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

புதிய ஒப்பந்தத்தின் படி 9 மில்லியன் ரூபா வரையில் செலுத்த வேண்டியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், 2016ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை 20 ரூபா மாத்திரமே அதிகரிக்கப்பட்டிருப்பதாக தோட்டத் தொழிலாளர்கள் சுட்டிக்காடியுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்தில் அடிப்படைச் சம்பளம் 500 ரூபாவாக வழங்கப்பட்டதுடன், உற்பத்தி ஊக்கக்கொடுப்பனவாக 140ரூபாவும், விலைக் கொடுப்பனவாக 60ரூபாவும், வருகைக்கொடுப்பனவாக 60ரூபாவுமாக மொத்தச் சம்பளம் 730 ரூபா வழங்கப்பட்டது.

எனினும் 2019ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தத்தில் அடிப்படைச் சம்பளம் 700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதுடன், விலைக் கொடுப்பனவு 50ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இம்முறை உற்பத்தி ஊக்குக் கொடுப்பனவு, வருகைக் கொடுப்பனவு என்பன நீக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

அநுராதபுரம் - தெற்குக்கிடையே மார்ச் முதல் அதிசொகுசு புகையிரதம்

(கொழும்பு)

உயர்தரத்திலான அதிசொகுசு புகையிரத சேவையை இலங்கைக்கு அறிமுகப்படுத்த எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்த போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அதன் முதற் கட்டமாக எதிர்வரும் மார்ச் மாதம் முதல் அநுராதபுரத்திற்கும் தென் மாகாணத்திற்கும் அதி சொகுசு புகையிரத சேவைகள் இரண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இதற்கான ஒத்துழைப்புக்களை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

கூட்டு ஒப்பந்தத்தை வர்த்தமானியில் வெளியிடக் கூடாது என போராட்டம்

(கொழும்பு)

கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தை வர்த்தமானியில் வெளியிடக் கூடாது என வலியுறுத்தி பொதுமக்களின் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடும் எதிர்ப்புக்களையும் மீறி 700 ரூபாய் அடிப்படை சம்பளத்துடன் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பாக மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் இ.தம்பையாவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த "ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், (இ.தொ.கா.), இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் (இ.தே.தொ.சங்கம்) என்பனவற்றின் தலைமைகளை அச்சங்கங்களின் அங்கத்தவர்கள் கேள்விக்குட்படுத்தி அவர்களை அவ்வொப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ளும்படி அல்லது அதனை இரத்துச் செய்யும்படி வலியுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும்படியும், அவ்வாறு நாம் முன்னெடுக்க விருக்கும் எல்லாவித போராட்டங்களிலும் எமது இருப்பை கைவிடாதும், இலக்கை கைவிடாதும் தொடர்ந்தும் முன்னேறுவதாகவும் அமைய வேண்டும்.

அத்துடன் அந்த இரண்டு சங்கங்களினாலும் கையெழுத்திடப்பட்டுள்ள அவ்வொப்பந்தம் சட்ட ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் செல்லுபடியற்றதென்பதால் அதற்கு தொழில் ஆணையாளர் சட்ட அந்தஸ்து கொடுக்கும் வகையில் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடக் கூடாதென வலியுறுத்தி மக்கள் தொழிலாளர் சங்கம் கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்துள்ளது. அதற்கு சகல தொழிலாளர்களும் ஆதரவளிக்க வேண்டும் என மக்கள் தொழிலாளர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-7)

இலங்கை அகதிகளை கொலை செய்த கனேடியர் மீது கொலைக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அகதிகள் உள்ளிட்ட எட்டுப் பேரை கொலை செய்த கனேடியர் மீது கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக தேடப்பட்டுவந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்த குறித்த சந்தேகநபர் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொலைக் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருக்கான தண்டனையை உறுதிசெய்வதற்கான விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர் கொலைகள் தொடர்பாக மக்ஆர்தர் (வயது -67) மிக நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த நிலையில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார். அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர் மீது கொலைக்குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் முன்னாள் காதலி, இரு ஆப்கான் குடியேற்றவாசிகள், இலங்கையை சேர்ந்த இரு அகதிகள் மற்றும் ஈரான், துருக்கி பிரஜைகள் ஆகியோரே சந்தேகநபரால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

விடுதலைப் புலிகளின் நோக்கத்தை நிறைவேற்றவே புதிய அரசியலமைப்பு

பிரசன்ன ரணதுங்க கண்டுபிடிப்பு

(மினுவாங்கொட)

புதிய அரசியலமைப்பை கொண்டுவருவதன் பிரதான நோக்கம் வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலிகளின் தேவைகளை நிறைவேற்றவே என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரி வித்துள்ளார்.

மினுவாங்கொட பகு தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததர்.

அவர் மேலும் தெரி விக்கையில்.

"இந்தப் பூமி இளைஞர், யுவதிகளுக்கு புதிய இட மல்ல. இதில் பல இளை ஞர்கள் போராடி மடிந்துள் ளனர்.

அந்தவகையில் 1988-1989 காலப்பகுதியில் கல வரத்தில் ஈடுபட்டிருந்த இளை ஞர், யுவதிகளை அதிலி ருந்து திசைதிருப்பி நல்வ ழிப்படுத்தியவர் எனது தந்தை.

அப்போது எனது தந் தையுடன் சேர்ந்து கம்பஹா மாவட்ட பொலிஸ் நிலை யத்திற்கு சென்று, கடத்திச் செல்லப்பட்ட இளைஞர் களை அழைத்து வந்ததுடன், அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்துள் ளோம்.

அத்தகைய சிறந்த பூமியே இலங்கையாகும். ஆனால் தற்போது மணி, யானை,புலி ஆகிய சின் னங்களை கொண்ட கட் சிகளே நாட்டை நாசமாக்கு கின்றது.

இதேவேளை நாட்டின் நலனுக்காக கொண்டுவர ப்படவுள்ளதாக கூறப்படும் புதிய அரசியலமைப்பு விடுதலைப் புலிகளின் தேவைக்காகும்.

இதற்கு மக்கள் விடு தலை முன்னணியும் உட ந்தையாக இருக்கின்றது.

ஆகையால் குறித்த சதித்திட்டத்தை முடிவுக்கு கொண்டுவராவிடின் நாட் டைப் பாதுகாக்க முடி யாது.

இதனால் இளைஞர், யுவதிகளும் இவைகளை கருத்திற்கொண்டு செயலா ற்ற வேண்டும்" என பிர சன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

சுதந்திர தின விழாவில் மகிந்த பங்கேற்கமாட்டார்

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இடம் பெறவுள்ள சுதந்திரதின விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கமாட்டாரென உள்நாட்டலுவல்கள் அமை ச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள் ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேகச் செயலாளர் உதித் லொக்குபண்டார இது தொடர்பில் உள்நாட்டலு வல்கள் அமைச்சுக்கு அறி வித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி,முன்னாள் பிர தமர், தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் என்ற ரீதி தியில் அவருக்கான அழை ப்பிதழ் அனுப்பப்பட்டுள்ள தாகவும் உள்நாட்டலுவல் கள் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள் ளார். (இ-7)

கீரிமலை பூர்வீகநிலப் பிரதேசத்தை விரைவில் விடுவிக்க நடவடிக்கை

அங்கஜன் எம்.பி.உறுதி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் விடுவிக் கப்பட வேண்டியிருக்கும் நிலப்பரப்புக்கள் குறித்து ஜனாதிபதியின் விசேட கவ னத்திற்கு கொண்டு செல்ல வுள்ளதாக முன்னாள் விவ சாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான அங்கஜன் இராம நாதன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பகுதியி லுள்ள முன்பள்ளி, சனச மூக நிலையங்கள் ஆகிய வற்றிற்கு 2018 ஆம் ஆண் டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் திட்டங் களுக்கான, பொருட்கள் வழங்கலுடன் , நிறைவு பெற்ற நிர்மாண , புனர மைப்பு பணிகளை பார் வையிட்டு, மக்களிடம் கையளிக்கும் நிகழ்வின் போது, இடம்பெற்ற கலந் துரையாடலில் நீண்டகா லமாக இடம் பெயர்ந்து தற்காலிகமாக பல சிரமங்க ளுக்கு மத்தியில் வசித்து வருவதுடன், தமது நீண்ட நெடுங்கால கோரிக்கையை சாதகமான சந்தர்ப்பங் களை பயன்படுத்தி மக்க ளுக்காக அவற்றினை மீண்டும் பரிசீலிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை யையடுத்தே, நாடாளு மன்ற உறுப்பினர் அங்க ஜன் இராமநாதன் இவ் வாறு கருத்து தெரிவித் துள்ளார்.

மக்களுடன் இணைந்து நேற்று மாலை கீரிமலை பூர்வீக நிலப்பகுதியின் எல் லைப்பகுதிக்கு நேரடியாக கள விஜயம் செய்து பார் வையிட்டிருந்தார்.

பூர்வீகமாக வழிபட்ட விஷ்ணு ஆலயம், பாரம் பரியமான சுடுகாட்டு பகுதி யும் பூர்வீக கீரிமலை பிர தேசத்தினுள் காணப்படு வதாக தெரிவித்து மக்கள் தமது கோரிக்கையாக முன் வைத்திருந்தனர்.

பொன்னாலை பருத்தித் துறை வீதியின் 2 கிலோ மீற்றர்கள் மக்கள் பாவனை இன்றியும், முக்கியமான தாக குடியிருப்பு பகு திகளும் அவற்றினுள் உள்ளடங்குவதாக மக்கள் சார்பில் சுட்டிக்காட்டப்பட் டிருந்தது குறிப்பிடத்தக் கது. (இ-7)

இலங்கைக்கு போதைவஸ்து கடத்தும் வெளிநாட்டவர்கள் ஐவர் கைதாகினர்

பெருமளவு போதைப்பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

நாட்டின் சரித்திரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய போதைவஸ்து தொகையுடன் தொடர்புடை யவர்கள் எனச் சந்தேகிக் கப்படும் ஐவரை பங்களா தேஷ் துரித செயற்பாட்டு படையணி கடந்த திங்கட் கிழமை கைது செய்துள்ளது.

வெவ்வேறு முற்றுகை களின் போது கைது செய் யப்பட்ட இவர்கள் தடுப்புக் காவலில் வைத்து விசா ரிக்கப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட ஐவ ரில் மூவர் பெண்களாவர். சர்வதேச போதைவஸ்து கடத்தலுடன் சம்பந்தப்பட் டதாக சந்தேகிக்கப்படும் இவர்களைப் பற்றிய விப ரங்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. இதேநேரம் இந்நடவடிக்கை கள்எவ்வாறு அமைந்தன என்பது தொடர்பாக பங்க ளாதேஷின் துரித செயற் பாட்டு படையணி நேற்று முன்தினம் ஊடக மாநா டொன்றை நடத்தவிருந்தது.

இலங்கை பொலிஸார் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி மேற்கொண்ட விசேட முற்றுகையின் போது கல் கிஸை டெம்ப்லர்ஸ் வீதி யிலுள்ள வீட்டுத் தொகுதி யொன்றில் இருந்து 272 கிலோ ஹெரோயினும் 5 கிலோ கொக்கேய்னும் கைப்பற்றப்பட்டன. இவற் றின் பெறுமதி 2.4பில்லி யன் ரூபாவுக்கு அதிகமா னதென மதிப்பிடப்பட்டது.

இந்த போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விசாரணை

களுக்காக இலங்கை பொலி ஸார் பங்களாதேஷ் பொலி ஸாருடன் தொடர்ந்து தொடர் பில் இருந்து வந்ததாக சிரே ஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதி பர் எம். ஆர். லதீப் தெரிவித் தார்.

விசாரணைக்கு உதவு மாறு இலங்கை அரசாங் கம் பங்களாதேஷிடம் கேட டதற் கிணங்க விசாரணை க்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக இலங்கை யில் உள்ள பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் எம். ரியாஸ் ஹமீதுல்லா உறுதியளித்தி ருந்தார்.

ஜனவரி 5ஆம் திகதி டாக்கா வீடொன்றில் இரு ந்து சொய்ஸ் ரஹ்மான் என்ப வரை பங்களாதே ஷின் போதைவஸ்து கட்டுப் பாட்டு திணைக்களம் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்தது.

கொழும்பில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் வழ ங்கிய தகவலுக்கிணங்கவே பங்களாதேஷில் மூன்று பெண்களையும் கைது செய்ய முடிந்ததாகக் கூறப்ப டுகிறது. கொழும்புக்குள் போதைவஸ்தை கடத்தி வரு வதற்கு இந்த பெண் களின் பங்களிப்பு பெரும் துணையாக இருந்ததா கவும் அதிகாரிகள் நம்புகி ன்றனர்.

பங்களாதேஷின் பொகுரா என்ற இடத்தை சேர்ந்த மொஹமட் ஜமாலு தீன் என்பவரும் ஜொய்புர் ஹத் என்ற இடத்தைச் சேர் ந்த ரபியுல் இஸ்லாம் ஆகிய இருவ ருமே கைது செய் யப்பட்ட ஆண்களாவர். இவர்கள் கடந்த டிசெம்பர் 23ஆம் திகதி இலங்கை க்கு வந்துள்ளனர்.

இச் சந்தேக நபர்கள் இருவரும், கல்கிஸை டெம்ப்லர்ஸ் வீதியில் உள்ள வீட்டுத் தொகுதியின் நான் காவது மாடியில் இருந்த போது கைது செய்ய ப்பட்ட தாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரி வித்தார்.

கிடைக்கப்பெற்ற தக வலையடுத்து மேற்கொள் ளப்பட்ட முற்றுகையில் 9 கிலோ ஹெரொயின் பிடி பட்டது. இவை கேக் பெட் டிகளில் பொதி செய்யப் பட்டு பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. சந் தேக நபர்களிடம் மேற்கொள் ளப்பட்ட மேலதிக விசார ணையின் போது கேட் ஒன்றின் ரிமோட் கட்டுப் பாட்டு கருவி ஒன்றும் சாவிக் கொத்தும் பொலி ஸாரால் கண்டு பிடிக்கப் பட்டன. குறிப்பிட்ட ரிமோட் கட்டுப்பாட்டு குறித்த கட் டடத்துக்கு சொந்தமானது அல்ல என்பது தெரியவந் தது. மேலதிக விசாரணை யில் கௌடானா வீதியிலு ள்ள வீடொன்றில் ஹெரோ யின் ஒளித்து வைக்கப் பட்டிருந்ததாக சந்தேக நபர் கள் கூறினர். இந்த வீட்டில் இருந்தே நாடு முழுவதும் ஹெரோயின் விநியோகி க்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி சுர் காமொனி என்ற பங்களா தேஷ் பெண் மற்றொரு கேக் பெட்டியுடன் கைது செய்யப்பட்டார். அப்பெட்டி யில் ஒருகிலோ ஹெரோ யின் இருந்தது. அந்தப் பெண்ணிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணையில் மேற்படி பெண் இரத்மலா னையில் வாடகைக்கு பெற் றிருந்த வீட்டைப்பற்றித் தெரிய வந்ததும் அங்கு நடத்தப்பட்ட தேடுதலில் 31 கிலோ ஹெரோயின் கைப் பற்றப்பட்டது.

ஒருசில அடையாளங் களின் அடிப்படையில் மேற் கூறிய அனைத்து இடங் களிலும் கண்டுபிடிக்கப் பட்ட அனைத்து ஹெரோ யின் வகைகளும் ஒரே ஹெரோயின் தொகுதியில் இருந்தே பெறப்பட்டமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரி வித்தார். (இ-7)

விபத்தில் இருவர் பலி!

(அளுத்கம)

காலி - கொழும்பு பிர தான வீதியில் அளுத்கம பகுதியில் நேற்று அதி காலை இடம்பெற்ற விபத் தில், பெண்கள் இரு வர் உயிரிழந்துள்ளனர்.

காலியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதுண் டதில், வீதியோரமாக சென்றுகொண்டிருந்த இரு பெண்களும் குறித்த விபத் தில் சிக்கிய நிலையில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அளுத்மக பிரதேசத் தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ-7)

இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று 31 ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பிரதி அதிபர் வி.சிவஞானம் தலைமையில் நடைபெறும். (இ-5)

இலங்கையில் தமிழர்

ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

சமுதாயத்தில் சமூக அந்தஸ்தை அடைவதற்கு கிறிஸ்தவம் ஒரு பாதையாகப் பயன்படுத்தப்பட்டது மிகவும் குறைவு என்றே தோன்றுகின்றது. அவ்வகையில் அது பயன்படுத்தப்பட்டிருப்பின் மேலும் அதிகளவில் மதமாற்றத்தை ஏற்படுத்துவது கைகூடியிருக்கும்.

மிஷனரி முயற்சிகள் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அவை வெற்றியளிக்காது போன நிலையை, கிறிஸ்தவ மதமாற்றத்திற்குப் பெருந்தடையாய் இருந்த சைவ விழிப்புணர்வு மேலும் பாதித்தது. இதன் விளைவாக கிறிஸ்தவ மிஷனரிமார் தமது செயற்பாடுகளை வன்னிக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் விஸ்தரித்தனர்.

ஆனால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் சைவ விழிப்புணர்வு அலைகள் பரவ ஆரம்பித்து அவை இந்தத் தொலைவிடங்களையும் சென்றடைந்திருந்ததனால் மிஷனரிமாரின் முயற்சிகள் காலந்தாழ்த்திச் செய்யப்பட்டனவாய்ப் போயின.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் சைவசமய இயக்கத்தினரும் கிழக்கு மாகாணங்களின் சைவ உயர்மட்டத்தினரும் ஒற்றுமையாகச் செயற்பட்டதனால் இந்த இடங்களிலும் சைவ விழிப்புணர்வு பரவியது.

எனினும் கிறிஸ்தவ மதமாற்றம் யாழ்ப்பாணத் தீபகற்கத்தில் எவ்வளவு வெற்றியளித்ததோ அதற்கு மேலாகக் கிழக்கு மாகாணத்தில் நிகழவில்லை என்பது இவ் அத்தியாயத்தின் முதற்பகுதியில் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் மூலம் உண்மையெனத் தெரிகின்றது.

மிஷனரிமாரின் வெகுசன மதமாற்றம் பற்றிய நம்பிக்கை தேய்ந்து கொண்டு போகையில் அவர்கள் சைவசமயப் பிரமாணத்தையும் அதன் அனுட்டானத்தையும் மிகவும் தீவிரமாகக் கண்டனஞ் செய்வதில் இறங்கினர்.

இதேவேளை சைவமக்களை மதம் மாற்றுவதற்குத் தூண்டும் வழிவகைகளை மிஷனரிமார் கைக்கொண்டபோது அம்முயற்சி யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் சைவசமய மறுமலர்ச்சியாளர்களை மட்டுமன்றி ஏனைய தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளவர்களையும் மேலும் வெகுளவே செய்தது.

நவீன அறிவு, கல்வி என்பனவற்றின் பரவல் சைவர்கள் மத்தியில் சுய சிந்தனையை உருவாக்கியதன் காரணமாக அவர்கள் விழிப்புணர்வு அடைந்தார்கள்.

இந்து நம்பிக்கைகளையும் அதன் நடைமுறைகளையும் மிஷனரிமார் வெளிப்படையாகவே தாக்குவதைக் கண்ட சைவர்கள் கிளர்ந்தெழுந்து சைவசமயத்தை மீளுயிர்ப்பிக்கவும் அதனைப் பாதுகாக்கவும் இயக்கமொன்றை ஆரம்பித்தனர்.

எந்த மிஷனரி நிலையங்கள் இவர்களுடைய அறிவுத் திறன்களை ஊக்கி வளர்த்தனவோ அதே நிறுவனங்களை இவர்கள் இப்போது எதிர்த்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சைவ விழிப்புணர்வுக்கு எதிராக எவ்வாறு மிஷனரிமார் இயங்கினர் என்பதையும் இப்படிப்பட்ட சாதகமற்ற சூழலில் தமது சமயத்தை மேம்படுத்துவதற்கு அவர்கள் மக்களை அணுகுவதற்கு என்னென்ன வழிவகைகளைப் பின்பற்றினர் என்பதையும் ஆராய்வது முக்கியமாகும்.

கிறிஸ்தவ மிஷனரிமாரின் வெறுப்புக்கும் பகைமைக்கும் எதிராகச் சைவ உயர் மட்டத்தினர் எவ்வாறு எதிர்வினையாற்றினர் என்பதை அடையாளங்கண்டு கொள்வதன் மூலம் அவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் பின்னர் ஆராயலாம். தமிழ் சுயவுணர்வின் வளர்ச்சி பற்றியும் தமிழ்த் தேசியவாதத்தின் உருவாக்கம் பற்றியும் ஆராய்வதற்கு இந்த நிகழ்வுகளும் சந்தர்ப்பங்களும் முக்கியமானவையாகும்.


158

THE

உதயதாரகை.—MORNING

VOLUME I.—1841.

Published Semi-Monthly, at one shilling a Qu

DEVOTED TO

EDUCATION, SCIENCE, AND LITER

AND TO THE DISSEMINATION OF ARTICLES

AGRICULTURE, GOVERNMENT AND RE

WITH A BRIEF

SUMMARY OF IMPORTANT NE

JAFFNA:

PUBLISHED AT THE AMERICAN MISSION PRESS.

உதயதாரகை.—MORNING STAR.

Thursday, January 7, 1841. [No. 1.

வரலாறு.

TERMS.

EDITORIAL ADDRESS.

"1841 இல் அமெரிக்கன் சிலோன் மிஷன் தமிழிலும் ஆங்கிலத்திலும் மாதம் இரு தடவை மோனிங் ஸ்ரார் (உதயதாரகை) எனப் பெயர் கொண்ட பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தனர். கல்வி, விஞ்ஞானம், இலக்கியம் என்பவைக்கு இடமளிப்பதும் விவசாயம், அரசு, மதம் ஆகியவை பற்றிய கட்டுரைகளை வெளியிடுவதும் முக்கியமான செய்திகளின் சுருக்கத்தைத் தருவதுமே இந்தப் பத்திரிகையின் நோக்கம் எனக் கூறப்பட்டிருந்தது"

தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அநேகமாக எல்லா கிறிஸ்தவ மிஷனரிமாரினாலும் ஆரம்பிக்கப்பட்ட சைவசமய எதிர்ப்புச் செயற்பாடுகள் பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் தீவிரமடைந்தன. பொதுக்கூட்டங்கள் நடத்துதல், வீடு வீடாகவும் கிராமம் கிராமமாகவும் சென்று மக்களுக்கு கிறிஸ்தவத்தைப் போதித்தல் என்பனவற்றுடன் வேறு வகையான தந்திரங்களையும் கையாண்டனர்.

பத்திரிகைகள், மதநூல்கள், சிறு பிரசுரங்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை வெளியிட்டு அவற்றைப் பரவலாக மக்களிடையே உலவ விட்டனர். சைவசமயமும் அதன் பிரமாணம், சடங்குகள், அனுட்டானங்கள் யாவுமே பொய்யெனவும் அவற்றை விட்டொழிக்கவேண்டுமென்றும் கிறிஸ்தவ மதம் மூலமே இரட்சிப்படைய முடியுமெனவும் இவற்றில் செய்திகள் காணப்பட்டன.

அச்சுக்கூடம் நிறுவப்பட்டதும் குறிப்பாக அமெரிக்கன் மிஷனரிமார் இதைப் பயன்படுத்தியதும் மிஷனரிமாரின் செயற்பாடுகளில் பிரதானமாக விருந்தன.

1841 இல் அமெரிக்கன் சிலோன் மிஷன் தமிழிலும் ஆங்கிலத்திலும் மாதம் இரு தடவை மோனிங் ஸ்ரார் (உதயதாரகை) எனப் பெயர் கொண்ட பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தனர். கல்வி, விஞ்ஞானம், இலக்கியம் என்பவைக்கு இடமளிப்பதும் விவசாயம், அரசு, மதம் ஆகியவை பற்றிய கட்டுரைகளை வெளியிடுவதும் முக்கியமான செய்திகளின் சுருக்கத்தைத் தருவதுமே இந்தப் பத்திரிகையின் நோக்கம் எனக் கூறப்பட்டிருந்தது.

(தொடரும்)

கூட்டு ஒப்பந்த விவகாரம்

மத்தியஸ்தம் வகித்தமை தொடர்பாக பிரதமர் தெளிவுபடுத்த வேண்டும்

திலகராஜ் வலியுறுத்து



(கொழும்பு)

கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்த அடிப்படையில் மத்தியஸ்தம் வகித்தார் என்பதை பகிரங்கமாக தெளிவுபடுத்த வேண்டுமென நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் வலியுறுத்தியுள்ளார்.

கடும் எதிர்ப்புகளையும் மீறி 700 ரூபாய் அடிப்படை சம்பளத்துடன் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ள குறித்த கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலகராஜ் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

"தோல்வி கண்டுள்ள கூட்டு ஒப்பந்த பொறிமுறையை மாற்றியமைக்க வேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்றில் தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்துவருகிறது.

கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற விவாதத்தின் போதும் கூட்டு ஒப்பந்த பொறிமுறையில் அரசாங்கமும் பிரதான மத்தியஸ்தம் வகிக்கும் வகையில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டுமென பகிரங்கமாக அறிவித்திருந்தோம்.

என்றாலும், அதற்கான உரிய பதிலை பிரதமரோ அல்லது அரசோ அளித்திருக்கவில்லை. தமிழ் முற் போக்குக் கூட்டணியும் அரசின் பிரதான பங்காளிக் கட்சியாகவுள்ளது.

இந்நிலையில், அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திட்டப்பட்டது. எம்மிடம் இது குறித்து எவ்வித பேச்சுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. அங்கு அரசும் ஒரு பிரதான பாத்திரத்தை வகித்துள்ளது.

அது எந்த அடிப்படையில் என்ற காரணத்தை பிரதமர் எமக்கு பகிரங்கமாக தெளிவுபடுத்த வேண்டும். உரிய பதிலை பிரதமர் அளிக்காவிடின் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் குறித்து நாங்கள் காத்திரமான முடிவுகளை எடுக்கவுள்ளோம்" என திலகராஜ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

உயிரிழந்த இராணுவத்தினருக்கு இழப்பீடு இலங்கைக்கு ஐ.நா.உறுதியளிப்பு

(கொழும்பு)

மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றிய போது, கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு இழப்பீட்டுத் திட்டத்தை துரிதப்படுத்த உதவுவோம் என ஐ.நா. உறுதியளித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக இராணுவ தளபதி மகேஷ் சேனநாயக்கவுடனான சந்திப்பின் போது, ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் இலங்கை வதிவிட பிரதிநிதி ஹானா சிங்கர் உறுதியளித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலியின் மத்திய பகுதியில் ஐ.நா.வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தின் துருப்புக்காவி ஒன்று சேதமடைந்தது.

இதில் பயணம் செய்த கப்டன் ஜெயவிக்ரம, கோப்ரல் விஜேகுமார ஆகியோர் உயிரிழந்த நிலையில், இவர்களுக்கு ஐ.நா மூலம், தலா 50 ஆயிரம் டொலர் இழப்பீடு வழங்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

அடுத்தகட்ட அரசியல் சூடானதாக இருக்கும் தேசிய அரசை அமைக்க திறந்த அழைப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம்ஒன்றை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய எந்தவொரு தரப்பினருக்கும் திறந்த அழைப்பு விடுவதாக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஜாஎல, ஏகல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்தகட்ட அரசியல் நிலைமை சூடானதாக இருக்கும் என்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பல



வேட்பாளர்கள் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவ்வாறு வேட்பாளர்கள் முன் வருவது சிறந்த ஜனநாயக நிலைமை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்கால வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய எந்தவொரு நபரையும் தேசிய அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக மேலும் தெரிவித்தார். (இ-7)

1,000ரூபா சம்பள போராட்டம் அரசால் காட்டிக்கொடுப்பு

ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை தொழிற்சங்கங்களும் அரசாங்கமும் இணைந்து காட்டிக் கொடுத்துள்ளதாக ஜே.வி.பி குற்றம்சாட்டியுள்ளது.

1,000 ரூபா சம்பள உயர்வு வழங்க முதலாளிமார் தயாராக இல்லாவிட்டால் அவர்கள் வழங்கும் தொகையுடன் எஞ்சிய தொகையை அரசாங்கம் பெற்றுக் கொடுத்து 1,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கியிருக்க வேண்டும் எனவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. 700 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கும் வகையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் நளின் ஜெயதிஸ்ஸ மேலும் தெரிவிக்கையில்,

தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதியோ போக்கு வரத்து, சுகாதார வசதிகளோ இன்றி கஷ்டப்படும் நிலையில் 1,000 ரூபா சம்பளமும் போதுமான தல்ல.

ஆனால் 1,000 ரூபா பெற்றுத் தருவதாக வாக்களித்த தொழிற்சங்கங்கள் அதனைக் காட்டிக் கொடுத்து விட்டு 700 ரூபா பெற ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளன. சிறிய சம்பள அதிகரிப்பே வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது. எஞ்சிய தொகையை அரசாங்கம் வழங்க வேண்டும்.

1,000 ரூபா கோரி தொழிலாளர்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஜே.வி.பி முழு ஆதரவு வழங்குகிறது. தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக இருக்கும் தொழிற் சங்கங்களே இந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இவர்களிடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாது.

முதலாளிமார் பெரிய இலாபம் பெற்று சொகுசு வாழ்வுவாழ்க்கையில்தோட்ட மக்கள் சிறிய சம்பளத்திற்கு தினமும் செத்துச் செத்து பிழைக்கின்றனர். இவர்களின் போராட்டம் நியாயமானது. நாமும் அவர்களின் போராட்டத்தில் இணைந்து கொள்கிறோம்.

தோட்டத் தொழிலாளர்கள் ஒரு வருடத்தில் உழைக்கும் தொகையை விட அதிக தொகையை தொழிற்சங்கத் தலைவர்கள் ஒருநாள் மதுபானத்திற்காக செலவிடுகின்றனர். இந்த தொழிற் சங்கங்கள் ஒருநாளும் 1,000 ரூபா பெற்றுக் கொடுக்கப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அரசமைப்பை நிறைவேற்றி விட்டு நாம் வெளியேறினால் வெற்றியே

சபாநாயகர் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பை நிறைவேற்றி விட்டு, நாம் வெளியேறினால், அது எமக்கான வெற்றியென்றும் அப்படியில்லையாயின் அந்த பிரச்சினை எமது அடுத்த சந்ததியினருக்கும் தொடருமென சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பு தொடர்பில் பலரும் பல விதமான அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதாக குறிப்பிட்ட சபாநாயகர் சட்டவாக்க சபைக்கு இன்னும் அரசமைப்பு முன்வைக்கப்படவில்லை. யோசனைகள் வந்துள்ளன. இந்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு அபிப்பிராயங்கள் முன் வைக்கப்படுகின்றன. அவை நல்லதாகவும் இருக்கலாம் கெட்டதாகவும் இருக்கலாம்.

இந்தப் புதிய அரசமைப்புத் தொடர்பில் தேரர்களின் அபிப்பிராயங்களும் கிடைத்தன. அவர்கள் அனைவரினதும் கோரிக்கை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட சகல கட்சித் தலைவர்களையும் அழைத்து, இது தொடர்பில் கருத்துக்களை முன்வைப்பதற்காக இரண்டு நாட்களை ஒதுக்கி ஆதரவான, எதிரான கருத்துக்களையும் சிறுபான்மை கட்சிகளின் அபிப்பிராயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடி முடிவுக்கு வருவது அவசியம் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (இ-7)

மாகாணத் தேர்தலில் கூட்டமைப்பாக போட்டியிட எதிர்க்கட்சியால் பல குழுக்கள் நியமனம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில்கூட்டமைப்பாக போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு, எதிர்க்கட்சியால் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் சகல தரப்பினருடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில், அவரது உத்தியோகப்பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற போதே இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பாகப் போட்டியிடுவது தொடர்பில், கலந்துரையாடுவதற்கு பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய அதற்கமைய தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)

தெற்காசியாவில் சிறந்த அறுவை சிகிச்சைக்கான விருது இலங்கைக்கு

(கொழும்பு)

தெற்காசியாவில் சிறந்த அறுவைச் சிகிச்சைக்கான விருதை இலங்கை வைத்தியர்கள் குழு பெற்றுக் கொண்டுள்ளது.

இலங்கை வைத்தியர் சேவை வரலாற்றிலே முதலாவதாக இலங்கை வைத்தியர்களுக்கு அறுவைச் சிகிச்சைக்கான விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

பிரித்தானிய வைத்திய குழுவினரால் இலங்கையின் வைத்திய குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், ஆலோ சகர், வைத்தியர் விண்டந்த கமகே தெரிவிக்கையில், 2018 ஆம் ஆண்டுக்கான அறுவைச் சிகிச்சைக்கான விருது இலங்கைக்குக் கிடைத்துள்ளது. குறித்த விருது இலங்கையின் வைத்தியத் துறையில் மிக முக்கியமான அம்சமாக இருப்பதாக தெரிவித்தார். (இ-7)

இலங்கையில் அமெரிக்கா போர் முகாமை அமைக்க ஒப்பந்தம் செய்யவில்லை

இராஜாங்க அமைச்சர் ருவான் விளக்கம்

(அநுராதபுரம்)

இலங்கையில் போர் முகாம் ஒன்றை அமைக்க எந்தவொரு திட்டத்திலும் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்யவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல நாடுகளுடன் பாதுகாப்பு அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருப்பினும் அமெரிக்காவுடன் இதுவரையில் எவ்வித ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை என மேலும் தெரிவித்துள்ளார். அநுராதபுரம் பகுதியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கொடிகாமம்	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	60	80	60	70	80
உருளைக்கிழங்கு	80	70	70	60	80
பச்சமிளகாய்	200	160	200	180	250
தக்காளி	100	100	80	50	100
மரவள்ளிக்கிழங்கு	80	90	70	40	60
கோவா	80	60	60	70	80
கரட்	100	80	100	80	160
பூசணி	50	30	20	30	40
புடோல்	60	60	80	60	80
வாழைக்காய்	60	90	70	60	100
சின்ன வெங்காயம்	100	100	150	110	120
பெரிய வெங்காயம்	80	80	80	70	80
பாகற்காய்	80	100	100	70	120
வெண்டிக்காய்	80	80	80	60	120
கருணைக் கிழங்கு	50	60	50	35	80
பயற்றங்காய்	100	100	100	80	120
லீக்ஸ்	120	100	100	80	120
பீற்றூட்	40	60	80	65	80
கறிமிளகாய்	150	150	120	80	140
முருங்கைக்காய்	800	600	600	500	600
போஞ்சி	60	80	80	70	80
கத்தரிதம்புள்ள	60	70	80	70	60
கீரை-1பிடி	30	20	20	20	40
தேசிக்காய்	100	100	120	60	80
தேங்காய் ஒன்று	60	45	40	30	30-40
இராசவள்ளி	120	130	100	80	120
வெங்காயப்பூ	80	60	80	60	120
முள்ளங்கி	30	70	80	30	80
பொன்னாங்காணி	40	50	40	10	50
வல்லாரை	15	70	20	10	20
ஈரப்பலா	—	100	40	100	60

ஆமை மற்றும் நண்டுகளை கடத்த முற்பட்ட இருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 304 ஆமைகள் மற்றும் 86 நண்டுகளை வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல முற்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு சந்தேகநபர்களும் நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 35 மற்றும் 38 வயதுடைய கெகிராவ மற்றும் ரம்புக்கனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

மதில் உடைந்து விழுந்ததில் பாதையில் பயணித்த பெண் பலி

(கொழும்பு)

ஊருகஸ்மங்ஹந்திய பகுதியிலுள்ள பாதணி விற்பனை நிலையம் ஒன்றின் மதில் ஒன்று உடைந்து விழுந்ததில் பாதையில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஊருகஸ்மங்ஹந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மதில் உடைந்து விழுந்ததில் பலத்த காயங்களுக்கு உள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

48 வயதுடைய ரோஹினி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த விபத்து இடம்பெற்ற விதம் அருகில் இருந்த விற்பனை நிலையம் ஒன்றின் சீ.சீ.ரி.வி கமராக்களில் பதிவாகியுள்ளது. (இ-7)

குருவின் நல்ல உள்ளம்

ஒருநாள் முனிவர் சித்தானந்தர் தம் சீடர்களுடன் நகரத்தின் தெருக்கள் வழியாக நடந்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஞானி. எனவே, மக்கள் அவரை மிகவும் மதித்தனர். அவர் சீடர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

ஒரு பணக்காரப் பெண்மணியின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தது. குழந்தைகள் மேல் மிகுந்த அன்புடையவர் ஞானி. அவர் குழந்தையை அன்புடன் நோக்கினார்.

குழந்தை ஒரு தட்டு நிரம்ப ரோஜா மலர்களைக் கொண்டு வந்து சித்தானந்தர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

மலர்கள், மணம் தரும் பொருட்கள், தைலங்கள் என்றால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார் என்பது சீடர்களுக்குத் தெரியும். ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்கு சொல்லவா வேண்டும். தலைக்கு இரண்டு மூன்றாக அவர்கள் மலரை அள்ளிக் கொண்டனர்.

மலர்களை அர்ப்பணித்த குழந்தை மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றது. சீடர்கள் புடை சூழ சித்தானந்தரின் உலா தொடங்கியது.

ஒரு வயதான மூதாட்டி ஞானியை தன் வீட்டுக்குள் வரவேற்றாள். சீடர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர். ஒரு பணியாள் அப்பிள் பழத்தட்டை அவர் முன்வைத்தார். ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்தார் சித்தானந்தர். பழம் மிகவும் சுவையாக இருந்தது. அவைகளை எடுத்து தன் சீடர்களுக்கு வழங்கினார்.

சீடர்கள் பழங்களை சுவைத்து உண்டனர். ஞானியைத் தொடர்ந்து செல்வதால் அவர்களுக்கு அவ்வப்போது நல்ல சுவையான பொருட்கள் கிடைத்து வந்தன. எனவே, இந்தச் சந்தர்ப்பங்களை சீடர்களில் எவரும் தவறவிடுவதில்லை.

செல்வந்தர்கள் வாழும் வீதிகளை எல்லாம் அவர்கள் கடந்து சென்றனர். இப்போது வசதி குறைந்தவர்கள் இடம் நகரின் ஒதுக்குப்புறமான பகுதி.

ஏழை விதவைப் பெண்ணொருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

"ஐயனே, நீங்கள் இதைச் சாப்பிட வேண்டும்" என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள்.

தட்டைப்பெற்றுக்கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங்கள் இருந்ததை பார்த்தார்.

ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

மீண்டும் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில் போட்டு மென்று சுவைத்தார். இப்படியாக எல்லாப் பழத்தையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார். தங்களுக்கு அப்பழத்தை வழங்காமல்தானே உண்டதைக் கண்ட சீடர்கள் வியப்படைந்தனர்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் ஞானி. பின்னர் வெளியே வந்து நடக்கத் தொடங்கினார். சீடர்கள் அவரோடு நடந்தனர்.

சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. "இதுவரை எல்லா பொருட்களையும், உணவையும் பகிர்ந்து கொண்ட குரு திராட்சைப் பழங்களை மட்டும் தன்னந்தனியாய்த் தானே உண்டது ஏன்?" எல்லாருடைய உள்ளத்திலும் இக் கேள்வி எழுந்து நின்றது.

சீடர் ஒருவர் வாய் திறந்து இக்கேள்வியைக் கேட்டே விட்டார். "நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழாங்கூட தரவில்லையே ஏன்?"

"அந்த திராட்சைப் பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன்" என்றார் குரு.

"உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, சுவையற்றதை நீங்கள் தனியாக உண்ண வேண்டும், சுவை மிகுந்ததை மட்டும் எங்களோடு பகிர்ந்துண்ண வேண்டுமா? இது நீதியாகுமா?"

"என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் நீங்கள் பங்கு கொள்ள விரும்புவது உண்மையாக இருக்கலாம். ஆனால், இதில் ஓர் ஏழைக் கைம்பெண் இடையே இருக்கிறாள். அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், "இந்தப் பழம் புளிக்கிறது" என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி விமர்சனம் செய்து அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்தி விடுவீர்கள். அவளது மனது படாத பாடுபட்டு நொந்து போய் விடும். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத் தரவில்லை என்று சொன்னார் முனிவர்.

எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கருத்தில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.

பல நாட்கள் நீரின்றி ஒட்டகத்தால் எப்படி வாழ முடிகிறது?

நீண்ட பயணத்தின் முன் ஒட்டக ஓட்டி அதற்கு அதிகப்படியான உப்பைக் கொடுத்து நிறையத் தண்ணீர் குடிக்கச் செய்கின்றார். சுமார் 75 தொடக்கம் 80 லீற்றர் வரை குடிக்கும்! ஒட்டகத்திற்கு மூன்று வயிறுகள்!

முதல் வயிற்றில் உணவைச் சேர்த்து வைத்துக் கொள்கிறது.

இரண்டாவது வயிற்றில் ஜீரணத்துக்கு உண்டான திரவங்கள் சுரக்கின்றது. மூன்றாவது வயிற்றில் அசை போட்ட பண்டங்கள் ஜீரணமாகின்றது.

முதல் இரண்டு வயிறுகளின் சுவர்களில் பையைபோல நிறைய வைத்துக் கொண்டிருக்கின்றது.

அதில் தண்ணீரைச் சேர்த்து வைத்துக்கொள்ளும். இந்தப் பைகளில் தண்ணீர் நிறைந்ததும் தசைகள் மூடிவிடும்.

தண்ணீர் தேவைப்படும் போது அது திறந்து சுரக்கும். ஒரு ஒட்டகம் மெல்ல, மெல்ல அதிக பாரம் ஏற்றாமல் சென்றால் பத்து நாட்களுக்கு கூட தண்ணீர் இல்லாமல் இருக்கும்.

சில சமயம் பாலைவனங்களில் தாகம் தாங்க முடியாமல் மனிதர்கள் ஒட்டகத்தைக் கொன்று உள்ளேயுள்ள தண்ணீரை வடித்துக் குடிப்பார்களாம்.

அரேபிய நாடுகளில் (சவுதி, டுபாய், கட்டார், பஹ்ரின்) ஒட்டகங்களில் ஓட்டப் பந்தயங்களுக்கு நல்ல பணம் பரிசாக கிடைக்கும்.

அத்தோடு அதன் உரிமையாளனை எல்லோர் முன்னிலையில் பாராட்டுவார்கள். அது அவருக்கு பெரிய கௌரமாக நினைக்கின்றார்கள்.

இதனால் சூடான், எகிப்து, எதியோப்பியா, ஏமன் போன்ற நாடுகளில் இருந்து சிறுவர்களை அடிமைகளாக வாங்கி ஒட்டக ஓட்டிகளாக மாற்றுகின்றார்கள்.

சிறுவர்களை ஒட்டிகளாக மாற்றுவதன் காரணம் சிறுவர்கள் ஓட்டிகளாக இருந்தால் அதற்கு பாரம் அதிகம் இல்லாததால் விரைவாக ஓடும்.

புளூடூத் பெயர் வந்தது எவ்வாறு?

புளூடூத் தொழில்நுட்பம் செயற்படும் விதத்திற்கும் இந்த பெயர் தரும் பொருளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நார்டிக் நாடுகள் என அழைக்கப்படும் டென்மார்க், சுவீடன், நோர்வே மற்றும் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த தொழில்நுட்பத்தை உருவாக்கினார்கள்.

இவர்களுக்கு சரித்திரத்தில் புகழ்பெற்ற டென்மார்க் அரசர் மீது அசாத்திய மரியாதையும் பிரியமும் இருந்தது. அந்த மன்னர் பெயர் ஹெரால்ட் புளூடூத். அவரின் நினைவாகவே இந்த தொழில்நுட்பத்திற்கு புளூடூத் எனப் பெயரிட்டனர். அவர் அப்படி என்ன செய்தார்? என்று கேள்வி எழுகிறதா? 900 ஆண்டில் ஹெரால்ட் புளூடூத் மன்னர் டென்மார்க்கை ஆண்டு வந்தார். டென்மார்க்கையும்நோர்வே நாட்டின் ஒரு பகுதியையும் இணைத்தார்.

பின்னர், கிறித்தவ மதத்தை தன் நாட்டில் அறிமுகப்படுத்தினார். தன்னுடைய பெற்றோர் நினைவாக ஜெல்லிங் ரூன் ஸ்டோன் என்னும் நினைவுச் சின்னத்தினை உருவாக்கினார். 986இல் தன் மகனுடன் ஏற்பட்ட போரில் மரணமடைந்தார். நாடுகளை இணைத்தது, கிறித்தவ மதத்தினை அறிமுகப்படுத்தியது, நினைவுச் சின்னம் அமைத்தது போன்ற செயல்களால் புகழடைந்தார்.

பெரிய விடயங்களைப் போலவே சிறிய விடயங்களையும் கவனிக்கக்கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும். ~ பாக்டர் ஜோன்ஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு ஓர் அன்பு மடல்

வட மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அன்பு வணக்கம். தங்களுக்கான இக்கடிதம் அவசரத்தின் பேரில் எழுதப்படுகிறது.

இப்போது நிலைமை எவ்வாறாக உள்ளது என்பதை நாம் சுருக்கி நீங்கள் அறிய வேண்டிய தில்லை.

கொள்ளை, களவு, போதைவஸ்துப் பாவனை என்ற அக்கிரமங்கள் தலைவிரித்தாடுகின்றன.

இதற்கு மேலாக வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசம் சொல்லிமாளா. இதுதான் என்றால், வீடுகளுக்குள் புகுந்து கொள்ளை அடிப்பவர்கள், பாலியல் வன்மத்தில் ஈடுபடுவதான தகவல்கள் இதயத்தை கருக்கி விடுகின்றன.

வட மாகாணம் முழுவதும் படையினரின் கட்டுப்பாடும் பொலிஸ் நிர்வாகமும் என்று கூறிக் கொண்டாலும் நிலைமை எப்படியாக உள்ளது என்பது உங்களுக்கே வெளிச்சம்.

இதை நாம் கூறுவதற்காக முழுப்பொறுப் பையும் உங்கள் மீது சுமத்தவும் நாம் விரும்ப வில்லை.

ஆனால் பொலிஸாரின் செயற்பாடு போதாது என்பதற்கு அப்பால், பொலிஸாரிடம் இனப் பாகுபாடு உள்ளதோ என்ற சந்தேகத்தையும் சில 'சம்பவங்கள் ஏற்படுத்தவே செய்கின்றன.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள வேம்படி மகளிர் கல்லூரி என்பது தேசிய பாடசாலையாக இருப்பதுடன் வட மாகாணத்தில் தமிழர்களுக்கான மிகச்சிறந்த பெண்கள் பாடசாலை என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆனால் அந்தப் பாடசாலை நிறைவடைந் ததும் மாணவிகள், அவர்களை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள், பேருந்து வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார், வான் என ஏகப்பட்ட வாகனங்கள் வேம்படி மகளிர் கல்லூரி வீதியை ஆக்கிரமித்துக் கொள் கின்றன.

இதுதவிர, கனரக வாகனங்களும் அந்த வீதிக்குள் வந்து மிகப்பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான போக்குவரத்து நெருக்கடி இருக்கின்ற போதிலும் கடமையில் ஈடுபட் டுள்ள போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் ஏதும் செய்ய முடியாமல் திக்குமுக்காடுவார். இதுவே நிலைமை என்றாகிறது.

இத்தகைய சூழ்நிலை மிக மோசமான விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தை தந்துவிடலாம்.

இதுபற்றிப் பல தடவைகள் எழுதியும் தங் கள் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் நிர்வாகம் ஏனோதானோ என்று எவ்வித அக் கறையும் இல்லாமல் இருக்கிறது.

இத்தகைய பொலிஸாரின் போக்கு தமிழ் மாணவிகள், தமிழ்ப் பெற்றோர் எது நடந்தாலும் பரவாயில்லை என்ற இனவஞ்சகம் சார்ந்ததோ என்று நினைக்குமளவுக்கு நிலைமை உள்ளது.

எனவே இங்கு எழுதப்படுகின்ற இக்கடித மானது ஒரு சிறிய வேலையையாவது உங் கள் மூலம் செயற்படுத்துவதற்கானது.

ஆகையால் அன்பார்ந்த வட மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அவர்களே! யாழ்ப் பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் வீதியை பாடசாலை நிறைவடையும் நேரத்திலாவது ஒரு வழிப்பாதையாக்குங்கள்.

இதனைச் செய்வதன் மூலம் போக்குவரத்து நெருக்கடியை முற்றாகத் தவிர்க்கலாம்.

உலக அமைதிக்கான இலங்கை
இராணுவத்தின் பங்களிப்பு மகத்தானது
சபாநாயகர் கரு ஜயசூரிய

உலக அமைதிக்கான இலங்கை பாதுகாப்பு துறை யினரின் பங்களிப்பானது நாட்டுக்கு கௌரவம் எனத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜயசூரிய ஐ.நா அமைதி காக் கும் படையில் இலங்கை தொடர்ந்தும் ஆக்கபூர்வமாக செயற்படும் எனவும் தெரி வித்தார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படைக்கு இலங்கையின் இராணுவம், வைத்தியர்கள் மற்றும் மதாதியர்களை இணை த்துக் கொள்வதில்காணப்படும் நடைமுறை தாமத நிலை உளளிட்ட பல்வேறு பிரச்சினை கள் குறித்து சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்றத்தில் சபா நாயகர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபையில் இலங் கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி ஹெனா சிங்கர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலை வர் கலாநிதி தீபிகா உடகம மற்றும் பாதுகாப்பு வெளி விவகார அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள், இராணுவ அதிகாரிகள் என பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

அண்மையில் மாலியில் இடம்பெற்ற தாக்குதல் சம்ப வத்தில் இறந்த இலங்கை இராணுவத்தை சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் தொடர்பாக இந்தக் கலந்துரை யாடலில் கவனத்தில் கொள் ளப்பட்டதுடன் உலக அமைதிக்காக இலங்கை இராணுவம் ஐ.நா அமைதி படையில் இணைந்து செயற் படுகின்றமையானது நாட் டுக்கு பெரும் கௌரவம் என சபாநாயகர் இதன்போது தெரிவித்தார். (ம-3)

மைதானத் திறப்பும் சின்னம் சூட்டலும்

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத் தின் புனரமைக்கப்பட்ட மைதான திறப்பு விழாவும் மாணவர் தலைவர் சின் னஞ் சூட்டும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு வித்தி யாலய மைதானத்தில் அதி பர் ச.சத்தியவரதன் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித் தார்த்தன் பிரதம விருந்தின ராகவும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப் பினர் தி.கமலநாதன் ஆகி யோர் சிறப்பு விருந்தினர் களாகவும் உடற்கல்விப் பாட உதவிக் கல்விப் பணிப பாளர் சண் தயாளன் கௌ ரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-78)

இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(புன்னாலைக்கட்டுவன்)

யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தி யால யத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட் டுப் போட்டி நாளை வெள் ளிக்கிழமை பி.ப 1.30 மணி க்கு பாடசாலை மைதானத் தில் வித்தியாலய அதிபர் த.லோகராஜா தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு சிவன் அறக்கட்டணை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம் பிரதம விருந்தினராகவும் வவுனியா தெற்கு வலயத் தின் ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவ லிங்கம் முரளீதரன் சிறப்பு விருந்தினராகவும் புன்னா லைக்கட்டுவன் தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி துர்க்காஜினி சுபாகரன் கௌ ரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-78)

++++++++++++++++

(யாழ்ப்பாணம்)

யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டி இன்று வியா ழக்கிழமை பிப ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு மதி எஸ். தேவராஜ் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு சண்டி லிப்பாய் பிரதேச செயலகத் தின் பிரதேச செயலர் திரு மதி யசோதா உதயகுமார் பிரதம விருந்தினராகவும் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ஏ.ஜெப நேசன் சிறப்பு விருந்தின ராகவும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (ம-3)

யாழ். கோண்டாவில் பகுதியில்
இனந்தெரியாதோரின் தாக்குதலில் வர்த்தகர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற வர்த் தகர் மீது இனந்தெரியாதோர் தாக்கியதில் அவர் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் யாழ்ப் பாணம் கோண்டாவில் டிப் போக்கு முன்னால் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் கண்டியைச் சேர்ந்த வர்த்தகரான என். எம். றிஸ்மி என்பவரே தலை யில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பில் கோப் பாய் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் சம் பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ள னர். (ம-3,10)

புத்தர் சிலைகள் அடித்து சேதமாக்கப்பட்ட வழக்கு
11 பேருக்கு விளக்கமறியல்

மாவனெல்லை பிர தேசத்தில் புத்தர் சிலைகள் அடித்து சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 11 பேருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட் டுள்ளது.

மாவனெல்ல நீதவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றது.

இதன்போது குறித்த 11 பேரையும் பெப்ரவரி 13 வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக இன்னமும் முக் கிய இரு சந்தேக நபர்களைத் தேடி வருவதாக நீதிமன்றத் தில் பொலிஸார் தெரிவித் தனர். (ம-3)

சத்திய தரிசனம்
இறைவனின் திருவடி தரிசனம்

❖ நல்ல எண்ணம் கொண்ட உள்ளத்தை பகவானுக்கு சமர்ப் பிக்க வேண்டும். புண்ணிய செயல்களால் அது புனிதமும் இனிமையும் பெற வேண்டும்.

❖ அனைத்து உயிர்களை யும் இறைவனின் குழந்தைகளாக நினைக்க வேண்டும். வெறுப்புண ர்வை தவிர்த்து எவருக்கும் தீங்கு இழைக்காத நல்லு ணர்வை வளர்க்க வேண்டும்.

❖ வாழ்க்கையை சத்தியசோதனையாக எடுத்து கொண்டு, எண்ணம், வாக்கு, செயல் மூன்றிலும் கடைப் பிடியுங்கள். அமைதியும், செல்வமும் உங்களை வந்தடையும்.

❖ நம்மை சீர்படுத்த எண்ணினால், கோபம் நம்மை ஆட்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடக்க உணர்வு தெய்வீகத்தை தர வல்லது.

❖ இறைவனின் பாதம் தர்மத்தையும், கைகள் மோட்சத்தையும், முகம் இறைவடிவத்தையும் காட்டுகி றது. இவற்றுள் இறைவனின் பாதமே மிக உயர்ந்தது. எனவே தான், இறைவனின் திருவடிகளைப் பூஜிக்கச் சொல்கிறார்கள் பெரியோர்.

❖ "நான்" என்ற ஆணவத்தை விடுவதுடன், சர்வமும் இறைவன் கொடுத்தது, எதுவும் தனக்கு உரியதல்ல என்று எண்ணி, ஆசைகளை துறந்தால் இறைவனை எளிதாக நெருங்கலாம்.

கனவுகள் நிஜமாக...

- நம்முடைய கனவுகள் நம்பிக்கை தரும் என்ற இலட்சியத்தோடு செயற்படத் தொடங்குங்கள். இன்றில்லை நாளையாவது ஜெயித்துவிடுவோம என்ற கனவோடு விழித்தெழுங்கள். சாதிக்கப் பிறந்தோம் என்று கருத்தில் கொண்டு நல்ல நம்பிக்கையுடன் வேலையைச் செய்யுங்கள்.
- வெற்றிபெற எண்ணங்களைத் தூய்மையாக வைத்திருங்கள்.
- தோல்வியைக் கனவில் கூட நினைக்காதீர்கள்
- உங்களது புகழுக்கும் வெற்றிக்கும் காரணம் உண்மையான உழைப்பு என்றே கவனத்தில் கொள்ளுங்கள். சிறு புள்ளியில் தொடங்கும் செயல்களே மிகப்பெரிய காரியங்களாய் மாறுகிறது.
- அதுபோல சின்னச்சின்ன இலட்சியக் கனவு கள் மிகப்பெரிய சாதனைகளுக்கு உரங்களாய் அமைகிறது. எத்தகைய வெற்றிக்கும் அதன் கருவாக அமைவது கனவுகளும் எண்ணங் களும் ஆகும். ஆகவே கனவை நிஜமாக்க இப்போதே செயற்படத் தயாராகுங்கள்.

ரவிராஜ் கொலை ;மேன்முறையீட்டு மனு மீது ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி விசாரணை!

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்க உத்தரவிட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடராஜா ரவிராஜின் மனைவி சசிகலா தாக்கல் செய்த இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான அசல வெங்கப்புலி மற்றும் தீபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கில் பிரதிவாதியான பிரசாத் ஹெட்டியாராச்சி என்பவர் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

இதன்போது. தான் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால் தன் சார்பாக சட்டத்தரணி ஒருவரை முன்னிலைப்படுத்துவதற்கு தனக்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்குமாறு பிரசாத் ஹெட்டியாராச்சி நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

அதன்படி வழக்கை ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம் அன்றைய தினம் சட்டத்தரணி ஒருவரை பிரசாத் ஹெட்டியாராச்சிக்கு ஆஜர் படுத்த உத்தரவிட்டது.

நடராஜா ரவிராஜ் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஜூரிகள் சபையின் ஒருமித்த தீர்மானத்திற்கு அமைவாக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் குறித்த கடற்படை வீரர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது என்று உத்தரவிடுமாறு இந்த மேன்முறையீட்டு மனுவில் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஐம்பது பந்தில் அதிரடிச் சதம் வில்லியசின் அதிரடி தொடர்கிறது



பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரின் போட்டி ஒன்றில். தென்னாபிரிக்க அணியின் முன்னாள் அதிரடி வீரர் ஏபி டி வில்லியர்ஸ் 50 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார்.

பங்களாதேஷில் நடைபெற்று வரும் இருபது-20 பிரீமியர் லீக் தொடரில், ரங்க்பூர் ரைடர்ஸ் அணிக்காக முன்னாள் தென்னாபிரிக்க வீரர் ஏபிடி வில்லியர்ஸ் விளையாடி வருகிறார்.

34 ஆவது ஆட்டமொன்றில் டாக்கா டைனமைட்ஸ்-ரங்க்பூர் ரைடர்ஸ் அணிகள் மோதின. முதலில் ஆடிய டாக்கா அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 186 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் ஆடிய ரங்க்பூர் ரைடர்ஸ் அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய கெய்ல் ஒரு ஓட்டத்திலேயே அவுட் ஆனார். அதன் பின்னர் வந்த ரோசவ்வும் ஓட்டங்கள் எது வும் எடுக்காமல் முதல் பந்தி லேயே வெளியேறினார்.

அதனைத் தொடர்ந்து களம் கண்ட ஏபிடி வில்லி யர்ஸ். அலெக்ஸ் ஹேல்ஸி டன் ஜோடி சேர்ந்து அதிரடியில் மிரட்டினார். இருவரும் எதிரணியின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினர்.

டிவில்லியர்ஸ் சிக்சர்க ளும். பவுண்டரிகளுமாக பறக்க விட்டு மைதானத்தை அதகளப்படுத்தினார்.

அத்துடன் 50 பந்துகளில் சதம் விளாசினார். இவர்களின் அதிரடியான ஆட்டத்தினால் ரங்க்பூர் அணி 18.2 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஏபிடி வில்லியர்ஸ் 50 பந்துகளில் 6 சிக்சர்கள். 8 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களும். அலெக்ஸ் ஹேல்ஸ் 53 பந்துகளில் 3 சிக்சர்கள். 8 பவுண்டரிகளுடன் 85 ஓட்டங்களும் எடுத்து களத்தில் இருந்தனர். (க)

அசாம் தொடர் குண்டு வெடிப்பு; 9 பேருக்கு ஆயுள் தண்டனை



(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் 88 உயிர்களைப் பறித்த தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சி.பி.ஐ. நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

அசாம் மாநிலத்தின் தலை நகரான கவுகாத்தி மற்றும் கோக்ரஜார். பான்கைகவ்ன். பார்பேட்டா ஆகிய பகுதிகளில் கடந்த 30.10.2008 அன்று அடுத்தடுத்து 9 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இச்சம்பவத்தில் 88 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இந்த தொடர் குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கில் பலர்மீது குற்றம்சாட்டி கவுகாத்தி நகரில் உள்ள சி.பி.ஐ. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. சுமார் பத்தாண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுவந்த இவ்வழக்கின் விசாரணை முடிவடைந்து சி.பி.ஐ. நீதிமன்ற சிறப்பு நீதிபதி அபரேஷ் சக்ரபர்த்தி கடந்த 28 ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

போடோலாந்து தேசிய ஜன நாயக முன்னணி இயக்கத்தின் தலைவர் ரஞ்சன் டைமரி உட்பட 15 பேரை இவ்வழக்கில் குற்ற வாளிகள் என அறிவித்த நீதிபதி. இவர்களுக்கான தண்டனை விபரம் 30 ஆம் திகதி நேற்று தெரிவிக்கப்படும் என தெரிவித்துள்ள நிலையில். நேற்று தண்டனை விபரம் அறிவிக்கப்பட்டது. போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி இயக்கத்தின் தலைவர் ரஞ்சன் டைமரி உட்பட 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து சி.பி.ஐ. நீதிமன்ற சிறப்பு நீதிபதி அபரேஷ் சக்ரபர்த்தி உத்தரவிட்டார்.

குற்றவாளிகள் மூவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் இருவர் தண்டனைக்கான காலத்தை இதற்கு முன்னர் சிறையில் கழித்து விட்டதால் அவர்களை விடுதலை செய்து நீதிபதி உத்தரவிட்டார். (4-7)

இறங்கி வந்து அடி; ஹோலி ஐடியா

துவக்க வீரர் ரோகித்சர்மா 77 பந்துக்கு 62 ஓட்டங்களும். ஷிகார் தவான் 27 பந்துக்கு 28 ஓட்டங்களும். அணியின் தலைவர் ஹோலி 60 ஓட்டங்கள். அம்பத்தி ராயுடு 40 மற்றும் தினேஷ் கார்த்திக் 38 என களத்தில் இருந்தனர்.

அணியின் தலைவரான ஹோலி மற்றும் அம்பத்தி ராயுடு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போது ஆட்டத்தின் 30 ஆவது ஓவரை நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் சானடர் வீசிக் கொண்டிருந்தார்.

இடையில் இருந்த ஹோலி. ராயுடுவிடம் நீங்கள் இறங்கி வந்து அடிக்கலாம் என்று ஆலோசனை கூறினார்.

ஆனால் ராயுடுவோ நின்ற இடத்தில் வைத்தே அடுத்த பந்தை பவுண்டரிக்கு விளாசினார். ஹோலி மற்றும் ராயுடு ஹிந்தியில் பேசிக் கொண்ட வீடியோ வெளியாகியுள்ளது. (க)

நியூசிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் அம்பத்தி ராயுடுவை ஹோலி இறங்கி வந்து அடிக்கும் படி கூறிய வீடியோ இணைத்தில் வைரலாகி வருகிறது.

நியூசிலாந்து-இந்தியா அணிகளுக்கிடையேயான மூன்றாவது ஒருநாள் போட்டி பே ஓவலில் நடைபெற்றது. இப்போட்டியில் நியூசிலாந்து அணி நிர்ணயித்த 243 ஓட்டங்களை இந்திய அணியி துடுப்பாட்ட வீரர் அதிரடியாக விளையாடி 43 ஓவர்களிலே எடுத்து வெற்றி பெற்றார்.

டோனி-ஹோலியின் சாதனையை முறியடித்த இந்திய வீராங்கனை

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி தலைவர் மிதாலி ராஜ். ஒருநாள் கிரிக்கெட்டில் வெற்றிகரமான சேஸிங் செய்த போட்டிகளில் அதிக சராசரியை வைத்துள்ளவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில். இந்திய அணி தலைவர் மிதாலி ராஜ் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்கள் குவித்து அணியை வெற்றி பெற வைத்தார். இந்தப் போட்டியில் அவர் நிதானமாக விளையாடினாலும். பொறுப்பான ஆட்டத்தால் இந்தியா வெற்றிபெற்றது.

இதன்மூலம் வெற்றிகரமான சேஸிங்களில் அதிக சராசரியைப் பெற்று மிதாலி ராஜ் சாதனை படைத்துள்ளார். மிதாலி ராஜின் சேஸிங் சராசரி 111.29 ஆகும். இது ஆடவர் மற்றும் மகளிர் இரண்டு கிரிக்கெட்டிலும் சேர்த்து அதிக மாகும்.

மேலும். டோனியின் சராசரியான 103.07 மற்றும் ஹோலியின் சராசரியான 96.23 ஐ விட அதிகம் என்பதால் மிகச் சிறந்த கிரிக்கெட்டராக மிதாலி ராஜ் உருவெடுத்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக டோனியின் ஆட்டம் போலவே மிதாலி ராஜின் ஆட்டம் அதிரடியாக இல்லாததால் தொடர்ந்து விமர்சனத்திற்கு ஆளானார். ஆனால் தற்போது அனைவரது விமர்சனத்திற்கும் பதிலடி கொடுத்துள்ளார். (க)

வடக்கு - கிழக்கு...

கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருட இறுதியில் அமைச்சரவை மாற்றத்தின்போது ஜனாதிபதியின் பொறுப்பிலிருந்த சமூக மேம்பாட்டுத்துறை அமைச்சு எனக்கு ஒதுக்கப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த அமைச்சினூடாக 800 மில்லியன் ரூபாயினை நான் வடக்கு கிழக்கிற்கு ஒதுக்கியிருந்தேன். அதனடிப்படையில் குறித்த மாகாணங்களின் 8 மாவட்டங்களுக்கும் குறித்த நிதி பகிரப்பட்டது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக குறித்த நிதியில் ஒருபகுதி நாட்டில் இடம்பெற்ற அரசியல் குழப்பநிலையால் திறைசேரிக்குத் திரும்பிச் சென்றுவிட்டது.

ஆனாலும் ஒதுக்கப்பட்ட அந்த நிதியினை மீண்டும் கிடைப்பதற்கு அமைச்சர் என்ற வகையில் நான் முயற்சி செய்வேன்.

அதேவேளை குறித்த நிதியினை மிகக் குறுகிய காலத்தில் ஒதுக்கியதுடன், அது விரைவாக மக்களைச் சென்றடைவதற்கு நானும் எனது அமைச்சின் அதிகாரிகளும் அந்தந்த மாவட்ட அதிகாரிகளும் கடுமையாக உழைத்திருந்தோம்.

எனவே வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு எமது அமைச்சினது சேவை மேலும் தொடரும் என்பதை நான் உறுதியுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.(ம-3)

வடக்கில் மீள்குடி...

துரிதமாக பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதேநேரம், முக்கியத்துவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய வடக்கு மற்றும் கிழக்கு வீதி அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் இணக்கப்பாட்டு குழுவின் விதப்புரைகளுக்கு அமைய வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வீதிகளின் புனரமைப்பு பணிகள் தனியார் நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேநேரம், கிழக்கு மாகாணத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்ட வீதிகளையும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட வீதிகளையும் புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை தனியார் நிறுவனம் ஒன்றிடமும் கையளிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-3)

காணாமல் ஆக்க...

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வட, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஒன்றிணைந்து சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

வட.கிழக்கு எட்டு மாவட்டங்களிலிருந்தும் (மட்.களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை) பழைய பேருந்து நிலையப்பகுதியில் காலை 10மணியளவில் ஒன்றிணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேசத்தின் தலையீட்டினைக்கோரி கதறி அழுது நேற்றைய போராட்டத்தினை மேற்கொண்டனர்.

எங்கே எங்கே உறவுகள் எங்கே? சர்வதேசமே உறவுகளை மீட்டுத்தா?, பதில் சொல் பதில் சொல்? அரசே பதில் சொல், எமது உறவுகள் எங்கே? வேண்டும் வேண்டும் உறவுகள் வேண்டும், சர்வதேசமே பதில் சொல், கையில் ஒப்படைத்த உறவுகள் எங்கே? எமது உறவுகள் எமக்கு வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும், மன்னாரில் புதைத்தது யார்? வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி வேண்டாம், வேண்டும் வேண்டும் உறவுகள் வேண்டும், ஐ.நாவே இலங்கைக்கு இனியும் காலக்கெடு வழங்காதே எம்மை படுகுழியில் தள்ளாதே, ஐ.நாவே கூட்டுப் புதைகுழி ஆதாரங்களை அழிக்கவிடாமல் காப்பாற்று, போன்ற கோசங்களை எழுப்பிய வாறும் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களைத்தாங்கியவாறும் 500ற்கும் மேற்பட்ட தாய்மார்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பழைய பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூட்டுக்கோபுரம் வரை சுமார் 100மீற்றர் தூரத்திற்கு நின்றிருந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பேருந்து நிலையத்திலிரு ந்து பேரணியாக பஜார் வீதி வழியாக ஹொறவப்பொத்தான வீதியூடாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தினை வந்தடைந்து நீதிமன்ற வழியாக மணிக்கூட்டுக்கோபுரத்திற்கு வந்து பழைய பேருந்து நிலையத்தினை திரும்பவும் வந்தடைந்து போராட்டத்தினை நிறைவு செய்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மகஜரினை மனித உரிமை பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் ஊடக பேச்சாளர் கே.தேவராசா தெரிவித்தார்.

இந்து, பௌத்த, கிறிஸ்தவ ஆகிய மும்மத சமயத்தலைவர்கள், யாழ்.மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களாக ப. சத்தியலிங்கம், ம.தியாகராசா, கே.சிவாஜிலிங்கம், தமிழ் மக்கள் கூட்டணியின் அருந்தவபாலன், பொது அமைப்பினர், வர்த்தகர் சங்கத்தலைவர், உறுப்பினர்கள், தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர், உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள் சார்ந்த உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். நண்பகல் 12மணியளவில் போராட்டம் நிறைவுற்றது. (ம-250)

யாழ். மாநகர...

கட்டடம் யாழ் கோட்டைக்கு அருகில் அமைந்திருந்தது. 1980 ஆம் ஆண்டு இறுதியில் கோட்டையை சுற்றி இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நல்லூருக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டு தற்போதுவரை இயங்கி வருகிறது. பழைய இடத்தில் அமைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அது நிறைவேறவில்லை.

தற்போது 38 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு கைகூடியுள்ளது. யாழ் மாநகரசபையும் யாழ் பொது நூலகமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் ஆகும்.

அந்த வகையில் மாநகர சபை கட்டடத்தை அமைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பெரும் நகர மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஊடாக யாழ் மாநகர கட்டடத்தை கட்டுவதற்கு 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 5 ஆண்டுத்திட்டமாக நிறுவ அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாணசபையில் இருந்து பல முயற்சி மேற்கொண்டோம் நகர அபிவிருத்தி அதிகாரசபை பெருநகர அமைச்சு ஊடாக ஆயிரம் மில்லியனும் மாகாண சபை ஊடாக 500 மில்லியனும், மாநகர சபை ஊடாக 300 மில்லியன் ரூபாய் பங்களிப்பில் நிறுவ ஏற்பாடு செய்திருந்தோம். அன்றைய தினம் இந்த கட்ட பெறுமதி ஆயிரத்து 800 மில்லியனாக கணிக்கப்பட்டது. தற்போது 2 ஆயிரத்து 350 மில்லியன் ரூபாய் வரும் என கணிக்கப்பட்டுள்ளது. முழு தொகையும் அமைச்சரவை சிபாரிசுக்கு அமைவாக வந்துள்ளதால் மாநகர இருப்பில் உள்ள பணத்தை பிற மூலதன திட்டத்துக்கு பயன்படுத்த முடியும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

அச்சுறுத்தலால்...

இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நேற்றையதினம் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இடம் பெற இருந்தது. அதற்கான ஏற்பாடுகள் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்டன. இதன் போது பாடசாலைக்குள் புகுந்த குழு ஒன்றினால் மாணவன் ஒருவன் தாக்கப்பட்டதோடு, ஆசிரியர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு இரவு 11மணிக்கு பாடசாலைக்கு பொலிஸார் வருகை தந்து ஆசிரியர்களை பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதனால் நேற்று காலை பாடசாலை முதல்வர் பெற்றோர்களை அழைத்து கலந்துரையாடியதோடு, வலயக் கல்வித் திணைக்களத்துடனும் கலந்துரையாடி மாணவர்களின் பாதுகாப்பினை கருத்தில் எடுத்து நேற்று இடம்பெறவிருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளையும் இரத்துச் செய்துள்ளார். இல்லங்கள் அலங்கரிக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் வினையாட்டுப் போட்டிகள் நிறுத்தப்பட்டமை மாணவர்களை மனதளவில் பாதித்திருக்கிறது.

மாணவனுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலேயே உரிய தரப்பினர்கள் விரைந்து நடவடிக்கைகளில் இறங்கியிருந்தால் நேற்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என சமூக ஆர்வலர்கள்குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்தோடு குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் இதுவரைக்கும்மூன்று பெண்களை மாத்திரமே கைது செய்துள்ளனர். (ம-3)

வைத்தியசாலை...

மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட போதும் அங்கிருந்து அவர் தப்பி சென்றுள்ளார்.

தப்பிச் சென்றுள்ளவர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என்றும் சமையல் வேலைக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சந்தேகநபரை பொலிஸார் திட்டமிட்டே தப்பிக்கவிட்டுள்ளதாகவும், சிறுமிகளைக் கடத்தும் அவரால் சமூகத்துக்கு ஆபத்து உள்ளதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தப்பிச் சென்றவரைக் கைது செய்யப் பொலிஸார் தவறினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை சுற்றிவளைத்துப் போராட்டம் நடத்துவோம் என்றும் நாவாந்துறை மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3-9)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)

45 கிலோ கஞ்சா...

இவர்கள் வைத்திருந்ததாக பொலிஸார் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

போதைப்பொருள்...

என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

எத்தகைய தோற்றத்தில் இருந்தபோதும் அவர்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் பணத்திற்கு அடிமையானவர்களாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். நேற்று மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் இடம்பெற்ற போதையிலிருந்து விடுதலைப்பெற்ற நாடு போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலி பயங்கரவாதிகளை தோற்கடிப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட யுத்தத்திற்கு சமமான யுத்தம் ஒன்றை போதைப் பொருள் சவாலை முறியடிப்பதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி இதில் போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு மரணதண்டனை வழங்கும் தீர்மானத்தையும் விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேரவாத பௌத்த தத்துவத்திற்கு எதிராக இன்று பல்வேறு சக்திகள் செயற்படுவதாகவும் பௌத்த தத்துவத்தை திரிபுபடுத்தி காட்டுவதற்கு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள், கலாசார பெறுமானங்களை அழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் சூழ்ச்சிகளைபோன்று போதைப்பொருள் கடத்தலும் நாட்டை அழிவுக்குள்ளாக்குவதற்காக முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சூழ்ச்சியாகுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் கடுமையான தீர்மானங்களை மேற்கொண்டு தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றி தாய் நாட்டை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலின் கீழ் போதைப்பொருள் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் நெறிப்படுத்தலில் நடைமுறைப்படுத்தப்படும். போதையிலிருந்து விடுதலைப்பெற்ற நாடு போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக இடம்பெறும் மாவட்ட மீளாய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் 13வது நிகழ்ச்சித்திட்டம் மாத்தறை மாவட்டத்தை மையப்படுத்தி இடம்பெற்றது.

மாத்தறை மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பிற்காக விரிவான நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் கீழ் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் 650 கிராமிய நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு போதைப்பொருள் பற்றி அறிவூட்டப்பட்டும் வருகின்றது.

மேலும் போதைப்பொருள் ஒழிப்பு செயலணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள கடற்படை மற்றும் விமானப்படை அதிகாரிகள் மூலம் மாத்தறை மாவட்டத்திலுள்ள 05 வலயங்களை சேர்ந்த சுமார் 51 பாடசாலைகளின் மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் இதற்கு பங்களிப்பு செய்தவர்களை பாராட்டும் நிகழ்வும் இம்மாநாட்டில் இடம்பெற்றன. மாத்தறை மாவட்ட பாடசாலை போதைப்பொருள் ஒழிப்பு பிரதிநிதிகளுக்கு உத்தியோகபூர்வ சின்னங்களை அணிவித்தல், நான்கு கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு குழுக்கள் மற்றும் 3 பாடசாலை போதைப் பொருள் ஒழிப்பு குழுக்களை பாராட்டி ஜனாதிபதியினால் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.(ம-3)

இலங்கையின்...

வர்களும் உள்ளடங்கியுள்ளதாக குற்றத் தடுப்பு பொலிஸ் தகவல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இந்த பட்டியலில் 13 சிறுமிகளும் அடங்கியுள்ளதாகவும், ஒவ்வொரு வருடத்திலும் வெளியிடப்படும் இந்த பட்டியலில் மேலதிகமாக பாடசாலை மாணவர்கள் உட்பட 100 சிறுவர்கள் உள்ளடக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் 11 முதல் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும், இந்த பிரிவினர் மீது சைக்கிள், மடிக்கணினி, கணினி திருட்டு போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இதேவேளை ஐ.ஆர்.சி பட்டியலில் 1200 பெண்கள் உட்பட்ட 43,000 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகள் குற்றங்களில் ஈடுபடுவதை தடுக்கும் முகமாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர வழிகாட்டுதலின் கீழ் ஒரு சிறப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

விசமிகளினால்...

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டு பகுதியில் வசிக்கும் இளம் குடும்பம் ஒன்றின் குடிசை இனந்தெரியாத விசமிகளினால் தீக்கிரையாக்கப்பட்டதில் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான உடைமைகள் தீயில் எரிந்து நாசமாகின.

நேற்று புதன்கிழமை அதிகாலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த ஞானசீலன் யோசப் டிக்கோலினிங் என்பவரது குடிசையே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மேற்படி இளம் குடும்பத்தினர் அரச காணி ஒன்றில் குடியமர்ந் துள்ள நிலையில் உடைமைகள் அனைத்தையும் அவர்கள் குடிசை யில் வைத்திருந்தனர்.

இந்நிலையில் சம்பவ தினம் அருகில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் அவர்களின் குடிசை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதனால் அனைத்தையும் இழந்து அக் குடும்பம் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. (ம-60)

இரு இந்தியர்கள்...

அண்மையில் வைத்து கைது செய்யப்பட்டதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களின் நடத்தையில் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில் அவர்களின் கடவுச்சீட்டை சோதனையிட்ட போதே இவர்கள் வீசா இன்றி நாட்டிற்குள் சட்டவிரோதமான முறையில் தங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

45 மற்றும் 50 வயதுடைய இந்திய பிரஜைகள் இருவரும் அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றில் தொழில் புரிந்து வந்துள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தும் நடவடிக்கைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-3)

வர்த்தக நிலையத்தில்...

அதனடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுத் தொடர்பான சுருக்க முறையற்ற விசாரணைகள் யாவும் முடிவுறுத்தப்பட்டு சட்ட மா அதிபரிடம்வழக்குக்கோவை பாரப்படுத்தப்பட்டது.

எதிரிக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு விசாரணைகளை சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் நெறிப்படுத்தியிருந்தார்.

அரச தரப்பு சாட்சியங்களாக இந்த வழக்கில் இரண்டு நேரடி சாட்சியங்கள் முற்படுத்தப்பட்டனர்.

சட்ட மருத்துவ அதிகாரியின் நிபுணத்துவ சாட்சியம் மற்றும் சந்தர்ப்ப சூழ் நிலை சாட்சியங் களாக 14 சாட்சியங் கள்வழக்கு தொடுநர் 02

Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்ப பிரிவு

A/L 2021 - திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை

பகல் வகுப்புக்கள் 8.00 - 11.00am

A/L 2019 Day Class

திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை

பகல் வகுப்புக்கள் 8.00 - 01.30pm

E.Tec/ B.Tec, SFT, ICT

பகல் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்.

புதிதாக அமைக்கப்பட்ட நவீன ஆய்வுகூட வசதிகளுடன்

தொடர்புகளுக்கு : 077 017 5346

(C-5551)

விற்பனைக்கு

Haier ரக குளிர்சாதனப் பெட்டி இரண்டு வாரங்கள் மட்டுமே பாவித்தது. கடை களுக்கு ஏற்றது.

தொடர்பு : 077 917 7311

(7353)

வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் Fancy கடை வேலைக்கு பெண்கள் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு :

077 748 0357

(7360)

கட்டாரில் டிறைவர் வேலை

கட்டாரில் முன்னணி நிறுவனமொன்றில் தகுதிவாய்ந்த சாரதிகளுக்கு சந்தர்ப்பம்!

இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது

2 வருட ஒப்பந்தம், வேலைநேர உணவு, தங்குமிடம், மருத்துவம், பயண ஏற்பாடு தினமும் 8 மணி வாரம் 6 நாள் வேலை. (வயதெல்லை 25 - 40)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (C-3552)

முற்றிலும் இலவச பயணம்! சம்பளம் ரூ.73000

Emerald Isle Manpower & Travel Services The Sri Lankan Recruitment Specialists License No. 2266

077 00 38 215 021 221 9 221

221- 1/1, மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

மரண அறிவித்தல்

தம்பையா நடராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

பிறப்பு : 19.11.1926 இறப்பு : 28.01.2019

அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் மாகியப்புல வீதி ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா நடராஜா 28.01.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - குஞ்சுப் பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பி முத்து - சீதேவியின் அன்பு மருமகனும், அமரர் கண்மணியின் அன்புக் கணவரும், பத்மலோஜினி (பின்லாந்), பிறேமதாஸ் (லண்டன்), ரகுதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானதேவன் (பின்லாந்), கலாஜோதி (லண்டன்), றொசானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்திகன், பரிதி, துசித், ஹரிசாந், சயானி, லகுசன், கலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் சின்னத்துரை, அமரர் சீனிவாசகம், அமரர் இராசம்மா, அமரர் இராசையா, அமரர் கற்பகம், அமரர் தவமணி பாலசுப்பிரமணியம், மனோன்மணி ஆகியோரின் அன்பு சகோதரனும், அமரர்களான சிவப்பிரகாசம், சிவராசா, செல்வரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.01.2019) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-5348)

மாகியப்புல வீதி, ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P : 076 102 3085, 00447878077170 தகவல் : குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

செல்லையா சிவசுப்பிரமணியம்

(சுவிஸ் மணியண்ணை – சுப்பு)

பிறப்பு : 08.03.1953
இறப்பு : 26.01.2019



இடைக்காடு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், தற்போது சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 26.01.2019 சனிக்கிழமை அன்று சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் மாணிக்கம் (லண்டன்) தம்பதியினரின் மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், ரதீபன், சாருனா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிலோஜனின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி (தபாலதிபர்), தெய்வானை மற்றும் நடராசா (ஓய்வு பெற்ற தபாலதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்), சரஸ்வதி, வல்லிபுரம் (ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்), மகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2019) வியாழக்கிழமை சுவிஸில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பிகலட்டி, இடைக்காடு, அச்சுவேலி. (7361) தகவல் : குடும்பத்தினர்

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(விபங்களைகளுக்கட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-5182)

Professional Certificate in Hotel Management / Retail Operation

மலேசியா அரச பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகள் மலேசியாவில் கல்வியுடன் கூடிய பயிற்சி பெறுவதற்கான அரிய வாய்ப்பு. உலக நாடுகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்

The Director - BCHS

021222 4550 / 076 1380212

(C-5346)

ஆங்கிலம், சிங்களம் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

Certificate in English / Sinhala
Diploma in English/ Sinhala
Spoken English/ Sinhala

கிழமை, வார நாட்களிலும்...

British College of Higher Studies

15, Stanley Road, Sirambiyady lane, Jaffna.

(லங்கா சதொச மேல் மாடி)

021 222 4550 / 076 138 0212

(C-5346)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.